தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர்: ௫௬ மலர்: ௬

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY THANJAVUR 23 OCT 1982

திருவள்ளுவர் யாண்டு: ௨௲௧௩,—துந்துபி புரட்டாசி
(1982 செப்டம்பர்—அக்டோபர்)

MALLIKA ARTS

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர்: ருகூ] [மலர்: கூ

உள்ளுறை:

1) உயர் எண்ணங்கள் .. 241
தந்தை பெரியார் ஈ. வே. இரா.

2) பாரதி பரமஞானி .. 252
K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,
தஞ்சை.

3) நாகர் - ஊரும் - பட்டினமும் .. 260
சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்.,
பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

4) பயிலுக நாளும் .. 266
புலவர் ஆ. வே. இராமசாமி,
வைரிசெட்டிப் பாளையம்-621012.

5) தேன் .. 270
தமிழ் மற்றும் இந்திய மொழிகள்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-625021.

6) வினா விடை .. 277

7) திருமருகல் .. 283
டாக்டர் இரா. கலைக்கோவன்,
எம். பி., பி. எசு., டி. ஓ.
தில்லைநகர். திருச்சி-620018.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௫௬	திருவள்ளுவர் யாண்டு உ௲க௩ துந்துபி–புரட்டாசி 1982 செப்டம்பர்—அக்டோபர்	மலர் ௬

தமிழ் வாழ்க

உயர் எண்ணங்கள்

—: தந்தை பெரியார் ஈ. வெ. இரா. :—

1. பகுத்தறிவு:

பகுத்தறிவு என்பது மனிதனுக்கு சீவநாடி—உயிர் நாடி ஆகும். சீவராசிகளில் மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. இதில் மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு காட்டுமிராண்டி என்பது பொருள்.

மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்.

பகுத்தறிவு பெறும்படியான சாதனம், நமக்கு நீண்ட நாளாகவே தடைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. நம்மை அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்தியவர்கள் நம் பகுத்தறிவு வளர்ச்சி அடைய ஒட்டாமல் தடை செய்துகொண்டே வந்துள்ளார்கள்.

தடைக் கற்கள்:

மக்களிடையே பகுத்தறி வைத் தடைப்படுத்தக் கடவுள், மதம். சாத்திரம், முதலியவைகளைப் புகுத்தி நம்பும்படி செய்துவிட்டார்கள்.

பொதுவாகக் கடவுளைப் புகுத்தியவன், கடவுள் பக்திக்கு முதல் நிபந்தனையாகக் கடவுள் பற்றிச் சிந்திக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன்தான் ஏற்படுத்தினான்.

கடவுள் பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டமுடியாத வஸ்து அறிவுக்கு எட்ட முடியாத வஸ்து. பஞ்சேந்திரியம் என்றால் மெய், வாய், கண், மூக்கு, செவி. இந்த அய்ந்துக்கும் கடவுள் எட்டமாட்டார்; இந்த அய்ந்தும் கொண்டு கடவுளைத் தேடவும் கூடாது என்பதாகும்.

இந்த இந்திரியங்களை எல்லாம் மீறிச் சிந்திக்க மனது என்று ஒன்று உள்ளது. இந்த மனதுக்கும் எட்டாதவர் கடவுள் என்று இத்தனை நிபந்தனைகளையும் போட்டுக் கடவுளைச் சொன்னான்.

கடவுள் என்றால் அப்படியே ஒத்துக் கொள்ள வேண்டும்; எங்கே—ஏன்—எப்படி என்று கேட்கக் கூடாது என்று கூறிவிட்டார்கள்.

கடவுள்போலவே மதத்தைப் பற்றியும் என்ன என்று சிந்திக்கக் கூடாது; மதம் எப்போது ஏற்பட்டது—யாரால் ஏற்பட்டது என்ன ஆதாரம் என்று சிந்திக்கக் கூடாது; சிந்தித்தால் மதம் போய்விடும். எனவே அப்படியே ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி விட்டார்கள்.

சாத்திரம்:

கடவுள், மதம் போலவே சாத்திரத்தைப் பற்றியும் ஆராயக் கூடாது; எவன் பகுத்தறிவு கொண்டு சாத்திரங்களை ஆராய்கின்றானோ அவன் நரகத்திற்குப் போவான் என்றும் எழுதி வைத்துள்ளார்கள்.

எனவே, பகுத்தறிவு என்பது ஆதாரத்தைக் கொண்டு தெளிவடைவது – மூடநம்பிக்கை என்பது ஆராயாமல் ஏற்றுக் கொள்வது ஆகும்.

நமது இழிநிலை முட்டாள்தனம் மாறவேண்டுமானால், நாம் ஒன்றும் கஷ்டப்பட வேண்டியதில்லை. பகுத்தறிவினைக் கொண்டு தாராளமாகப் பல தடவை நன்கு சிந்தித்தால் ஒவ்வொன்றும் தானாகவே நழுவி விடும்.

நாத்திகம் என்றால்:

நமது கொள்கை பகுத்தறிவு—பகுத்தறிவு என்றால் நாத்திகம் ஆகும்; அறிவு கொண்டு சிந்திப்பதுதான் நாத்திகமாகும்.

கடவுள், மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதவர் என்று கூறப்பட்டாலும் அதுதான் உலகத்தை உண்டாக்கி நம்மை எல்லாம்

நடத்துகின்றது; எல்லா விதமான சர்வ சக்திகளும் உடையது என்று கூறப்படுகிறது.

அப்படிப்பட்ட கடவுள் நம்மைத் தவிர்த்து மற்ற உலகத்துக்கு ஒன்றுதான். ஆனால்; நமக்குத்தான் ஆயிரக் கணக்கில் கடவுள்கள். நம்மைத் தவிர்த்த மற்ற உலகிற்கு, கடவுளுக்கு உருவம் இல்லை. நமது கடவுளுக்கோ பல்லாயிரக் கணக்கான உருவங்கள்.

மற்ற நாட்டுக் கடவுள்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை. நமது நாட்டுக் கடவுளுக்கு மட்டும் மனிதனுக்கு வேண்டியவை, எல்லாமுமே வேண்டும்,

மூடநம்பிக்கை:

மற்ற நாட்டுக்காரர்கள் கடவுள்—யோக்கியம், நாணயம், ஒழுக்கம் உடையது என்று உண்டாக்கி இருக்கிறார்கள். நமது நாட்டுக் கடவுளுக்கு இந்த ஒழுக்கம், நாணயம் எதுவும் கிடையாது. மனிதரில் கீழ்த்தரமானவனுக்கு என்னென்ன குணங்கள் இருக்குமோ அவைகள் அத்தனையும் கடவுளுக்கு ஏற்றி விட்டிருக்கிறார்கள்.

இப்படி ஏராளமாகப் பேதங்களும், நடப்புக்கு ஒவ்வாத காரியங்களும், காரியத்தில் கேடான குணங்களும் கடவுளுக்குக் கற்பித்திருக்கின்றார்கள்.

இவைகளையெல்லாம் நம்புவதுதான் மூடநம்பிக்கை. நல்லவண்ணம் சிந்தித்து ஆராய்ந்து ஏற்கின்றதை ஏற்றுக் கொண்டு மற்றதைத் தள்ளுவதுதான் பகுத்தறிவு.

கடவுள் ஏன் ஒழிய வேண்டும்?

நாம் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்தால் பகுத்தறிவிற்கு ஏற்ற கடவுள் இருக்கின்றதா என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் இல்லவே இல்லை.

உண்மையில் ஒரு கடவுள் இருக்குமானால் நமக்குத் தெரியாமல் இருக்க வேண்டிய அவசியம் என்ன? அந்தக் கடவுள் தாம் இருப்பதாக நமக்காவது ஏன் தெரியப்படுத்தக் கூடாது?

மக்கள் அறிவு கொண்டு சிந்தித்தல் வேண்டும். அதுவே பகுத்தறிவை வளர்க்கும். பகுத்தறிவிற்குத் தடையாக இருப்பது கடவுள், மூடநம்பிக்கை, சிந்திக்க ஒட்டாத நிலை.

சிந்தனையே அறிவு; அதுவே மனித வாழ்வை உயர்த்தும்.

2. சிந்தனை ஏற்பட

சமுதாயத் துறையில், மதத்துறையில், கடவுள் துறையில்—'சிந்திக்காதே — நம்பு' என்று சொல்லி, சிந்திக்க விடாமல் மனிதனைத் தடுத்துவிட்டதால், மனிதன்—உருவில் மனிதனாக, அறிவில் மிருகத்தைவிடக் கீழான நிலையிலும் இருந்தான்.

மனிதனது பஞ்சேந்திரியங்களுக்கு எட்டாததையும், திரிகரணங்களால் அறிந்து கொள்ள முடியாததையும் நம்புவதுதான் பகுத்தறிவற்ற தன்மையாகும்.

எந்தக் காரியத்தை மனிதன் நம்புவதாக இருந்தாலும், அது அவனுடைய பஞ்சேந்திரியங்களில் ஒன்றுக்கோ — திரிகரணங்களில் ஒன்றுக்கோ புலப்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

அந்தப்படி நாம் நடந்தால் அறிவு வளரும்; சிந்தனை ஏற்படும்.

3. பக்தி என்றால் என்ன?

பக்தி என்றால் என்ன? கோவிலுக்குப் போய் கடவுளைக் கும்பிடுவதும், வீட்டில் கடவுளை நினைத்து நாமம் — விபூதி அணிந்து கடவுளைக் கும்பிடுவதும், பார்ப்பனரிடம் மிக்க விசுவாசங் காட்டி அவர்களுக்கு மரியாதை செய்து காசு, பணம், சாமான் கொடுப்பதும், ராமாயணம், பாரதம், பாகவதம், கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய மதநூல்களைப் படிப்பதும், படிக்கக் கேட்பதும் அல்லாமல் வேறு எதை பக்தி என்கிறார்கள்?

ஸ்தல யாத்திரை, தீர்த்த யாத்திரை செய்வது புண்ணியம் என்பார்கள்; பிரபந்தம் தேவாரம் படிப்பதும் பெரிய பக்தி என்பார்கள்.

பக்தியைப் பற்றி விளக்கப் போவோமேயானால், இப்படி ஏதாவது இன்னும் பல நடப்புகளைத்தான் சொல்லலாமே ஒழிய—பக்திக்கும்—அறிவுக்குமோ, அல்லது எந்தவிதமான ஒழுக்கம், நாணயம், நன்றி, உபகாரம், நேர்மை முதலிய மனிதப் பண்புகள்—அதாவது, மற்ற மனிதனிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய எந்த ஒரு நற்குணத்தையாவது முக்கியமாகக் கூறமாட்டார்கள்.

இந்த மேற்கண்ட குணங்கள்தான் மனிதனிடம் இருக்க வேண்டிய அவசியமான பண்புகளாகும் என்று மக்களிடையில் பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்குமானால், நாட்டில்—மனித சமுதாயத்தில் இவ்வளவு ஒழுக்கக் கேடு, நாணயக் கேடு, நேர்மைக் கேடு ஏற்பட்டிருக்க வேண்டிய அவசியமே இருந்திருக்காது.

4. பகுத்தறிவுவாதியின் கொள்கை

பேய் இருக்கிறது என்பது எவ்வளவு பொய் சங்கதியோ அவ்வளவு பொய் சங்கதி கடவுள் என்பதும்.

தேவர்கள் என்பதும் பெரும் பொய்யே யாகும்.

மேல் உலகம் என்பதும் மகா மகா பொய்யே யாகும்.

ஏனெனில், இந்த உலகத்திலிருந்து ஆகாய மார்க்கத்தில் சுமார் எட்டு கோடி மைல் தூரத்தில் சூரியன் இருக்கிறது. அதுவரை தூரதிருஷ்டக் கண்ணாடியால் ஆகாயம் பார்க்கப்பட்டாகி விட்டது. எங்கேயும் உஷ்ணம் தவிர எந்த உலகமும் தென்படவில்லை.

இவர்கள் கடவுள்களுக்கு எதிரிகளாக இருந்து கொல்லப்பட்டார்கள் என்றால், கடவுளுக்கு எதிரி இருக்க முடியுமா?

சோசியம் என்பதும் பெரும் பொய்; வெறும் ஏமாற்றுதலே ஆகும்.

சகுனம் பொய்.

இராகுகாலம், குளிகை, எமகண்டம், நல்ல நேரம், கெட்ட நேரம் எல்லாம் பொய்; பட்சி சாத்திரமும் பச்சை பொய்; நட்சத்திரப் பலன், கிரகப்பலன், வாரப்பலன், மாதப்பலன், வருடப் பலன் என்பவை யாவும் பொய்யே.

பல்லி விழும்பலன், கனவு காணும் பலன், தும்மல் பலன் எல்லாம் பொய். கழுதை கத்துதல், ஆந்தை அலறுதல், காக்கை கரைதல், நாய் ஊளையிடுதல் ஆகியவற்றிற்கு பலன் என்பதெல்லாம் பொய்.

மந்திரம், மந்திரத்தால் அற்புதம் செய்தல் முதலிய எல்லாம் சுத்த பித்தலாட்டம்; பொய்.

எண்ணிக்கையில் மூன்று, பதின்மூன்று, எட்டு, பதினெட்டு எண்ணிக்கைகள் கெட்டவை என்பவை சுத்தப் பொய். இன்னும் இவைபோன்ற அநேக காரியங்கள் மூடநம்பிக்கையின்பாற்பட்டதேயாம்.

''தெரியாத, புரியாத கடவுளை மனிதன் நம்பித்தான் ஆக வேண்டும்'' என்பதான கட்டாயம் ஏற்பட்டு மனிதன் நம்ப ஆரம் பித்ததின் பலனே இவ்வளவு பொய்களையும் மனிதன் நம்ப வேண்டியவனாகி விட்டான்.

நம்பியதின் பலனாக, பலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கவலைப்படாமல் அவைகளுக்குத் தன்னை சரிபடுத்திக் கொள்ளு கிறான்.

பஞ்சேந்திரியங்களுக்குத் தட்டுப்படாத விஷயம், பொருள், நடப்பு எதுவானாலும் அது பொய்.

இதுதான் பகுத்தறிவுவாதியின் கொள்கை.

5. கடவுள்

உலக மாறுதலை வளர்ச்சிக்குப் பயன்படாமல் செய்வதும், மனிதனுக்கு உள்ள அறிவின் சக்தியை மனித வளர்ச்சிக்கு, கவலை யற்ற வாழ்வுக்கு உதவாமல் செய்வதும் பெரிதும் கடவுள்–கடவுள் சக்தி–கடவுள் செயல் என்பவை போன்ற முட்டாள்தனமான கருத்துக்களும் நம்பிக்கையுமேயாகும்.

கடவுள் எண்ணமோ, மனித சக்திக்கு மேம்பட்ட தெய்வீக சக்தி என்கின்ற எண்ணமோ மனிதனுக்கு இல்லாமல் இருந் திருக்குமானால், இன்று மனிதன்—குறைந்தது இந்த மூவாயிரம் —நாலாயிரம் ஆண்டுகளில் அவனது அறிவின் பயனாய், சிந்தனா சக்தியின் பயனாய் அய்நூறு ஆண்டுகளாவது உயிர் வாழத்தக்க தன்மையை அடைந்திருப்பான். இறக்கை இல்லாமலேயே வாழுந் தன்மையையும் அடைந்திருப்பான்.

சர்வ சக்தியுள்ள கடவுள் ஒன்று இருக்கிறது; எல்லாம் கடவுள் செயல் எனக் கருதும் மக்களில் யாருக்குந் துக்கமும் கவலையும் இல்லாமல் இருக்க முடியாது.

எனவே, மனித சமுதாய வளர்ச்சிக்கும், மனித சீவனுக்கு துக்கமும் கவலையும் இல்லாமல் இருப்பதற்கும், 'சர்வசக்திக்' கடவுள் ஒருவர் இருக்கிறார் என்கின்ற எண்ணம் அடியோடு ஒழிந் தாக வேண்டும்.

கடவுள் இல்லை; இல்லவே இல்லை என்கின்ற கருத்தை மக்களிடையே உண்டாக்கி அவர்களுக்கு அறிவுத் தெளிவை உண் டாக்குவதை விட உலகில் சீவகாருண்யத் தன்மை வேறு இல்லை என்றே சொல்லுவேன்.

மோட்சம் என்ற சொல்லுக்குப் பொருள் என்னவென்றால் 'துக்க நாசம் சுக ப்ராப்தி' என்றுதான் சொல்லப்படுகிறது.

இச்சொல்லுக்கு ஆதாரப் பூர்வமான பொருளும் இருந்து வருகிறது. இந்நிலைக்கு அறிவுதான் காரணம். அதாவது, ஞானந்தான் என்றும் காணப்படுகிறது. இதனாலேயேதான், ஞானிக்குத் துக்கமில்லை — கவலையில்லை' என்று சொல்லப்படுவதோடு, ஞானிக்குக் கடவுளும் இல்லை; கல்லெடுப்பும் இல்லை' என்றும் சொல்லப்படுகிறது.

ஞானி என்றால் என்ன பொருள்? அவன் யார் என்று பார்த்தால், —ஞானமுடையவன் ஞானி; புத்தியுடையவன் புத்தன் — அறிவை உடையவன் அறிவன் என்பதாகும். இவர்களுக்கெல்லாம் கடவுள் இல்லாமல் போனதற்குக் காரணமென்ன?

அறிவையோ, புத்தியையோ, ஞானத்தையோ கொண்டு சிந்திப்பதாலேயே கடவுள் என்ற சொல்லே தென்படுவதற்கு இல்லாமல் போய்விடுகிறது. ஞானிக்குக் கடவுள் இல்லை என்பது மாத்திரமல்லாமல், 'துறவிக்கு கடவுள் இல்லை' என்று சொல்லப்படுகிறதல்லவா? அதன் பொருள் என்ன? துறவி என்றால் ஆசை அற்றவன், பற்று அற்றவன் என்பதுதான் பொருள். துறவிக்கு ஆக வேண்டிய காரியம் ஒன்றும் இல்லை. அவனுக்கு எதைப்பற்றியும் ஆசை இல்லை. ஆனதால், அவனுக்கு கடவுளைப் பற்றிய கவலை இல்லை என்பதோடு அவனுக்கு கடவுள் தேவையும் இல்லை; இயற்கையோடு இயைந்து கொள்ளுகிறான்.

எனவே இயற்கையை நல்ல வண்ணம் உணர்ந்து கொள்ளுவது, அதற்கேற்பத் தனது வாழ்வை அமைத்துக் கொள்ளும் அறிவுதான் முன் குறிப்பிட்ட ஞானமாகும். எனவே, பகுத்தறிவு பெற்ற சமுதாயம் 'மனிதத் தன்மை அடைவதற்கு பகுத்தறிவுவாதியாக, அதாவது பஞ்சேந்திரியங்களுக்கு புலப்படாத, தெரிந்து கொள்ள முடியாத விஷயங்களை — அதை எவை ஆனாலும், சிந்திக்காமலும், அவற்றைப் பற்றிக் கவலைப்படாமலும் இருப்பது தான் மனிதத் தன்மையாகும்.

சாமிக்கு உருவங்கள் கற்பிக்கப்பட்டதையும், சாமிக்கு உருவம் உண்டு என்று சாமியைக் கற்பித்தவன் சொல்லவே இல்லையே; குணம் இல்லை; பிறப்பு இல்லை; ஆதி இல்லை—அந்தம் இல்லை—இல்லை—இல்லை என்று சொன்னானே தவிர சாமிக்கு ஏதாவது இருக்கிறது என்று எவன் சொன்னான்? இப்படி இருக்க, பிறகு எப்படி சாமி (கடவுள்) மனிதனைப் போல நன்மை செய்தவர்களுக்கு நல்லது செய்வான்—கெட்டது செய்தவர்களுக்குத் தண்டனை கொடுப்பான்?

பிரார்த்தனை செய்தவர்களுக்கு நல்லது செய்வான் — செய்யாதவர்களைக் கவனிக்க மாட்டான் என்பதும், பாவம், புண்ணியம்

என்பதும் (கடவுள்) மன்னிப்பு என்பதும், இப்படிப்பட்ட காரியங்கள் — எப்படி கடவுளுடன் சம்பந்தப் படுத்தப்பட்டன? மற்றும் உருவமே இல்லாதவனுக்கு மனித உருவம்; வேண்டுதலே இல்லாதவனுக்கு பெண்டாட்டி—வைப்பாட்டி—பிள்ளை—நகை — கல்யாணம் முதலிய இவை எப்படி ஏற்பட்டன?

கருணைசாலி—யாரையும் காப்பாற்றும் உதாரகுணசாலி என்பவனுக்கு கத்தி, வேல், வில், சக்கரம், மழு இவை எதற்கு? மற்றும் அவனை மோட்சத்தில் வைத்தான்; இவனை நரகத்தில் வைத்தான்—இதெல்லாம் எதற்காகச் சொல்வது?

இவை மனிதனுக்கு உள்ள கடவுள் நம்பிக்கையைக் காட்டுகிறதா? மனிதன் கடவுள் நம்பிக்கையால் சுத்த காட்டுமிராண்டி ஆகிவிட்டான் — ஆகி வருகிறான் என்பதைக் காட்டுகிறதா? இவற்றைக் கடவுள் பிரசாரகர்கள் உணர வேண்டும். கடவுள் நம்பிக்கை இருந்தால், மானம், வெட்கம், அறிவு, தெளிவு இருக்கக் கூடாது என்பது நிபந்தனையா?

மதத்தின் பேரால் (ஏன்—கடவுளின் பேரால் என்றும் சொல்லலாம்) உலகில் உள்ள எல்லா மக்களும், எல்லா நாட்டிலும், மதங்களின் அவ்வக் காலங்களின்போது காட்டுமிராண்டிகளாய், மூட நம்பிக்கைக்காரர்களாய், சிந்தனையற்ற முட்டாள்களாகவே இருந்திருக்கிறார்கள்.

ஆரியர்கள், அவர்கள் இனத்தார்களான மேல் நாட்டார்களை எடுத்துக் கொண்டாலும் கடவுள்—மதம் விஷயமாக இன்று அவர்களும் நாமும் பங்கு கொள்ளும் எந்தக் கருத்தும் சுமார் நாலாயிரம் அல்லது அய்யாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவைகளுக்கென்றே சொல்லும்படியான சொற்கள் இருந்ததாகவும் தெரியவில்லை. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக என்று சொல்லும்படியான காலத்தில் ஏற்பட்ட ஆரிய வேதம் என்னும் கற்பனைக் கோவைகளிலும், கடவுளைப் பற்றியோ மதத்தைப் பற்றியோ இன்று குறிப்பிடுவதைப் போன்ற சொற்களைக் காணவும் முடியவில்லை.

வேதம் என்பதில் காணப்படும் ஏதாவது ''கடவுள் தத்துவம்'' கூட வேதத்துக்கு வியாக்கியானம் செய்தவர்களான சங்கரர், இராமனுசர், மாத்துவர் முதலிய மதகுருமார் என்பவர்கள் தனித் தனியாக அவரவர்களுக்கென்று செய்து கொண்ட வியாக்கியானங்கள் கூட கடவுளைப் பற்றி ஒன்றுக்கொன்று பொருந்தாத வகையில் உள்ளன. அந்தக் கருத்து வேற்றுமைகள்தான் இன்று சங்கர—இராமனுச—மாத்துவ மதங்களாக உருப்பெற்றிருக்கின்றன.

இவர்கள் மூவர் அல்லாது ஒரு பொது மனிதன் வேதத்திற்கு இன்று வியாக்கியானம் செய்வதானால் வேதத்தில் கடவுளைக் காட்டவோ, காணவோ முடியாது.

வேதத்தில் பஞ்ச பூதங்களைத்தான் காணலாம். ஆனால், அந்தப் பூதங்களுக்கு அக்கால காட்டுமிராண்டி மவுடீகத்திற்கு ஏற்ப ஒவ்வொரு எசமானர்களை ஏற்படுத்தி, பிறகு அவர்களே அவைகளாக ஆக்கப்பட்டு, அதனால் அவர்கள் தேவர்களாக இருந்திருக்கிறார்கள். இந்திரதேவன், வாயுதேவன், வருண தேவன், அக்கினிதேவன், பூமிதேவன் என்று — இவை முறையே ஆகாயம், வாயு, அப்பு, தேயு, பிருதிவி என்கின்றவையான பஞ்ச பூதங்களைக் குறிப்பிடுபவையேயாகும். இவைகளைச் சேர்த்து வைக்கும் இயற்கைக்குப் பலவாறு பெயரிட்டுக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வைந்தின் கூட்டினால் ஏற்பட்ட உலகைத்தான் பிரபஞ்சம் என்று பெயரிட்டு அழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகில் மனிதனுக்குத்தான் கடவுள் கற்பிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய—மற்ற சீவராசிகளுக்கும் புல், பூண்டு, தாவரங்களுக்கும் கடவுள் என்கிற உணர்ச்சியே கிடையாது. ஆனால், அவை எல்லாம் மனிதர்களைப் போலவே தோன்றி வாழ்ந்து செயல்பட்டு அழிந்து மாய்ந்து போகின்றன.

இதில் எவ்வித மாறுதலும் காண முடியவில்லை.

பிறவியில் இயற்கையாய் உள்ள பேதங்களின் சில மாறுதல் களின் அடிப்படையிலும் பேதங்களைக் காண்பதற்கில்லை.

சீவநூல்—சீவ ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆதியில் அதாவது, உலகம் தோன்றிய காலத்தில் மனிதனும் மற்ற மிருக சீவபிராணி களும் ஒன்று போலவேதான் நடந்துவந்ததெனக் குறிப்பிட் டுள்ளனர். மனிதனுக்கு மற்ற சீவராசிகளைவிட அறிவுத்துறை யில் சிறிதும் மாற்றம் இயற்கையில் இருந்து வருகிற காரணத்தால் மனிதனுக்கு ஆசை பெருக்கெடுத்து — வாழ்க்கையின் பெருங் கவலைக்கு ஆளாகி, அதனால் துக்க சுகத்திற்கும் ஆளாகி உழல் கிறான். ஆசையும் மடமையும் சேர்ந்தே மனிதனுக்குக் கடவுள் கற்பிக்கப்பட்டு — புகுத்தப்பட்டு அறிவின் பயனைக் கெடுத்துக் கொண்டு கவலைக்கும் துக்க சுகத்திற்கும் ஆளாகி அழிகிறான்.

மனித சமுதாயத்தில் கடவுள் கற்பனை புகுத்தப்படாமலிருந் தால் மனிதர் நிலைமை இன்று வேறாக இருந்திருக்கும். அதா வது, கவலையற்ற துக்கமற்ற வாழ்வு வாழும்படியான நிலை மையை மனிதன் எய்தியிருப்பான்.

இன்று கவலையும் துக்கமும் இல்லாத மனிதனைக் காண்பதே அரிதாக இருக்கிறது. எந்த உயர்நிலையில் இருப்பவனுக்கும் கவலையும் துக்கமும் குடிகொண்டிருக்கிறது. கடவுள் எண்ணத்தை ஒழித்தவர்களுக்குக் கவலையில்லை. எல்லாம் இயற்கை என எண்ணியிருப்பவர்களுக்குத் துக்கம் கவலை இல்லாமலிருக்கலாம். அப்படிப்பட்டவர்களைத்தான் ஞானிகள்—முற்றும் துறந்த மெய்ஞ்ஞானிகள் என்று சொல்லுவார்கள்; அந்த நிலையை மனிதன் எய்துவது எளிதல்ல.

மோட்சம் என்ற சொல்லுக்கும் முக்தி என்ற சொல்லுக்கும் உண்மையாக (பொருள்) கவலையற்ற தன்மை; துக்கமற்ற தன்மை என்றுதான் பொருள். மோட்சம் (அல்லது முக்தி) – துக்க நாசம்; இந்நிலை கடவுள் (ஒருவர் அல்லது பலர்) இருக்கிறார் எனும் எண்ணமுடையவனுக்கு ஒன்றுமே தோன்றாது.

எவ்வளவுக் கெவ்வளவு கடவுள் கருத்து ஆழமாகப் பதிகிறதோ —உடைத்தானவனாய் இருக்கிறானோ அவன் ஆயுள் பரியந்தம் துக்கமும் கவலையுங் கொண்டவனாகத்தான் இருப்பான்; பேராசைக்காரனாய்த்தான் இருப்பான்.

பொதுவாக இன்றும் பார்ப்போமானால், கடவுள் பக்தன்—கடவுளை வணங்குகிறவன் அவன் முட்டாளானாலும் அறிவாளி ஆனாலும் எதற்காக வணங்குகிறான்? ஒரு வேண்டுகோளின் மீது —அல்லது எதையாகிலும் எதிர்பார்த்துத்தானே?

ஏதாவது ஒன்றை வேண்டித்தானே பக்தி வணக்கம்? பூசை, தொழுகை, பிரார்த்தனை எல்லாம் இதன் அடிப்படைதானே!

மனிதனிடம் கடவுள் நம்பிக்கை, கடவுள் பக்தி இருப்பதெல்லாம் ஆசை காரணம்தானே ஒழிய மனிதனை ஒழுக்கமுடையவர்களாக்கவோ, மற்றவர்களுக்கு பயன்படும்படி செய்யவோ அல்ல.

தேவர்கள் என்றும், பல தெய்வங்கள் என்றும், அவற்றின் அவதாரமென்றும்—உருவமென்றும், அதற்காக மதமென்றும் — சமயமென்றும்—மதாச்சாரியர்களென்றும் — சமயாச்சாரியர்களென்றும்—கட்டியமுபவர்கள்.

ஒன்று—பகுத்தறிவில்லாதவர்களாவது அல்லது ஒரு ஆசாமி என்றோ, அல்லது ஒரு உருவமென்றோ, கொள்வதும் உண்மை ஞானமற்றவர்களின் கொள்கை ஆகும்.

ஆதலால், உலகத் தோற்றமும் அதில் நடைபெறும் உற்பத்தி, வாழ்விப்பு, அழிப்பு என்பவையான மூவகைத் தன்மைகளையும் மேற்படி 'சாமிகளோ, — ஆசாமிகளோ, ஒவ்வொரு தன்மையை ஒவ்வொரு ஆசாமி பொறுப்பாளியாய் இருக்கிறான் என்றோ

நினைத்துக் கொண்டிருப்பவர்களை விசார ஞானமற்றவர்கள் என்றே சொல்லவேண்டும்.

தமிழர்களைக் கை தூக்கிவிட இன்று எந்தக் கலையும் எந்தக் கவிஞரும் இல்லை. உள்ளவர்கள் எல்லோரும் ''பத்தாம் பசலிக் காரர்கள்'' என்று சொல்லும்படி பழமையைக் கையாண்டே தங்கள் கலைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

உலகிலேயே சகிக்க முடியாத இழிவு நமது கலையில்தான் இருக்கிறது; நாம் எல்லாம் நான்காம் சாதி, அய்ந்தாம் சாதி மக்கள்; மேல்சாதிக்காரனுடைய வைப்பாட்டி மக்கள் என்று எழுதி நம்பும்படி செய்து நமது தலையில் சுமத்திவிட்டார்கள்.

6. தர்மம்

நமக்கு எறும்பை மிதித்துவிட்டாலும் பாவம்; அவனுக்கோ (மேல் நாட்டானுக்கோ) இதைப்பற்றிக் கவலையில்லை. இங்குப் பசுவை அடித்தாலும் பாவம் என்கிறோம். அங்கு அவனோ—அதைக் கொன்று தின்னாவிட்டால் மார்க்கமில்லை.

ஒருவன் சிற்றப்பன் மகளைக் கட்டலாமென்கிறான். மற்றவன் அதைப் பாவமென்கிறான். இப்படிச் சௌகரியத்திற்கும் பழக்கத்திற்கும் ஏற்றவாறுதான் கொள்கைகளும் கோட்பாடுகளும் இருக்கக்கூடும். ஆதலால், அனைத்தும் காலதேச வர்த்தமானத்திற்கேற்றவாறு இருக்கவேண்டும் என்பது நன்கு விளங்கும். அன்றியும், அந்தக் காலத்தில் திறமைக் கேற்றவாறு ஏதேதோ எழுதி வைத்திருக்கலாம். அவற்றைக் குறித்து இப்போது கவலையில்லை, ஆனால், நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது, இன்றைய நிலைமையில் எப்படி இருக்க வேண்டும் என்பதேயாகும். அதிலிருந்து தப்ப வழியுண்டா என்றும் பார்க்க வேண்டும். நாம், நமது செல்வம்—அறிவு—ஒழுக்கம் முதலியவை பிரயோசனமான வழியில் செலவிடப்பட வேண்டுமென்பதனால் அது தர்மத்திற்கு விரோதமானதென்று சொல்ல முடியாது. ★ ★

'தளா' என்பது ஒருவகைப் பனை மரம். இம்மரம் மிகவும் பழைய சங்க இலக்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் (எழுத்-230), இராமாயணம் முதலிய இதிகாசங்களிலும் மிகவும் போற்றப்பட்டிருக்கிறது. இப் பனைமர ஓலையில் முற்காலத்தில் எழுதி வந்தனர். இன்று ,தாள்' என்று எழுதுவதற்கு வழங்கப்படும் பொருளின் பெயர் 'தளா' என்பதின் மரூஉச் சொல்லேயாம்.

—வி. எஃச். வி. இராகவன்,
யுவான் சுவாங்.

†பாரதி பரம ஞானி

K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

[2]

பாரதியார் பாமர மக்களை இயற்கையழகில் ஈடுபடச் செய்து அன்னவர்தம் உள்ளத்தை இறைமையிலே ஒன்ற வைக்க முற்பட்டு இயற்கைத் தோற்றத்தில் இறைவனது ஏற்றத்தைக் காட்டி இறைவனைப் போற்றச் செய்தார். இவ்வாறு போற்றுங்காலை 'யாவும் அவனது, எல்லாம் அவன் செயல்' என்ற எண்ணம் மக்கள்பால் பழகி குடிகொள்ளும்போது 'நான்' எனும் அகங்காரம் ஒழிய, ஞானமும் பக்தியும் ஒன்று கூடுமென்பது பாரதியாரது உள்ளம். மற்றும் அவர், 'நான்' எனும் உணர்ச்சியை, தன்னை ஆட்டுவிப்பானாகிய இறைவனை ஒருமுகமாக கவனித்து வாழும் ஞான உணர்ச்சியாக மாற்ற வைத்தார்.

அழகுகள் பல குவிந்து கவரும் ஞாலத்து இயற்கைப் பொருள்களில் இறைவனைக் காணும் அளவுக்குத் திகழும் உயிரோட்டத்தையும் அவரது கைவண்ணத்தையும் உணர்ந்து, கண்ணுக்குப் புலப்படாத வானவெளிப் பொருள்களையும் இயக்கிவரும் இறைவனது உண்மைத் தத்துவத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார். மக்களது வாழ்க்கை இயற்கை நலனுடையதாக வேண்டுமென்று எண்ணி இயற்கையின் செல்வமனைத்தும் நாட்டு விடுதலைக்கும் பயன்படுமாறு எண்ணினார். இறைவனாகக் காட்சியளிக்கும் இயற்கையை, பாரதியார்,

''இயற்கை யென்றுனை யுரைப்பார்—சிலர்
இணங்கும் ஐம்பூதங்கள் என்றிசைப்பார்
செயற்கை யின்சக்தி யென்பார்—உயிர்த்
தீயென்பார், அறிவென்பார் ஈசனென்பார்''

இவ்வாறு போற்றியபோதும், ஞான பாரதியார் மக்களுக்கு ஆற்றல், அறிவு, வளம், வீறு, தெளிவு, இனிமை, நன்மை முதலியன அளித்து பயன்படும் பொருளாக இயற்கையைக் காண்கிறார். அழகைக் காட்டி ஆனந்த மூட்டும் இயற்கைக் காட்சியைப் பாரதியார் தன் கற்பனைத் திறந்தால் போற்றியபோதும், நாட்டு மக்களின் பொது நன்மைக்கும் பயன்படும் பொருளாகவே இயற்கையினையும் இறைவனையும் கருதினார். இவர், அதனால்,

''முப்பதுகோடி சனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை

---

†துணர் 56, மலர் 4, பக்கம் 170இன் தொடர் கட்டுரை.

ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை'' வகுத்தார்.

பாரதியார், ஞானக்கலையின் பரிவால் மன்னுயிர்களைக் கடவுள் வடிவம் எனக் கொண்டு கருணை பூண்டு,

''அறம்
செய்தலுன் கடனே—அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே''

என கீதாஞானத்தோடு உபநிடத தவஞானத்தையும் புகட்டுவாராயினார். இயற்கையின் விளைவுச் செல்வங்களை நாட்டு மக்களின் பொது நன்மைக்கு பயன்படுதல் மூலம், இணையற்ற கருமயோக ஞானத்தின் தெளிவினைப் பற்றி உணர்த்துவாராயினார். துன்பத் துயரின்றி தன்னை மறந்து தன்னலம் துறந்து, யான், எனது யாதுமின்றிப் போக்கி பற்றற்று பணிபுரியும் ஞான வகையினையும் அவர் ஒழிக்க வைத்தார்.

''தன்னை வென்றா லவையாவும் பெறுவது
சத்திய மாகு மென்றே
முன்னை முனிவர் உரைத்த மறைப்பொருள்
முற்று முணர்ந்த பின்னும்
தன்னை வென்றாலும் திறமை பெறாதிங்கு
தாழ்வுற்று நிற்போமா?''

என பாழ்த்த நிலையினை மாற்றும் முடிபு தேற்றி பாரதியார் விளங்க வைப்பார். இதனை,

''நம்பினார் கெடுவதில்லை—இஃது
நான்கு மறைத் தீர்ப்பு''

என்பர் ஆன்மீகத்தில் ஈடுபட்ட அருள்ஞானக் கவிஞர்.

இயற்கையிற் காணப்படும் கவர்ச்சி யெனும் சக்திக்கு மூலமாகிய பரம்பொருளை, உண்மை, அறிவு இன்ப இயல்போடு பாரதியார் ஆன்ம ஞானத்தால் கண்டு கொண்டார். கவர்ச்சி சக்தியின் மீது காதலுற்றார். இதனாற்றான் இயற்கைக் காட்சியில் நிலவும் இறைமையின் மாட்சியினை, தம் மனத்திலே மன்னி நிற்கும் சக்தியின் மூலம் புலப்படுத்தும்போது, அச்சக்தி தன்னைப் பின் பற்றித் துரத்திக் கொண்டு வருவதுபோன்ற உணர்வினைப் பெற்றார். உன்மத்தம் உற்றார்போன்று சக்தியை அன்னையாகக் கொண்டு உன்மத்தச் சிலிர்ப்புடன் இயற்கையழகினில் வெறி கொண்டு அன்பு மீதூர, அன்னைக்கு ஞானக் கவிதை மலர்களை ஆனந்தமாகப் புனைந்து சூட்டி மகிழ்வாராயினார். இயற்கை அழிவிலும் அச்சக்தி ஊழி முடிவில் நின்று ஊழிக்கூத்து இயற்றுவதை ஞானக் கண்ணால் கண்டு ஞான இன்பம் எய்தினார். இடியிலும் மின்னலிலும் புயற்காற்றிலும், விடாது பெய்யும் அடை

மழையிலும், சக்திக் காட்சியினைக் கண்ட பாரதியாரது கவிதை யுள்ளத்தில் இறைமை கணத்துக்குக்கணம் மாறி, தாள விதியுடன் தோன்றும் தெய்வீகக் காட்சியைக் கண்டு கொண்டு ஆனந்தக் கூத்து புரிவாராயினார். இத்தகைய காட்சிதான் பாரதியாருக்கு ஞானக் கவிதையாக மலர்கின்றது.

''திக்குகள் எட்டும் சிதறி—தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து—வெள்ளம்
பாயுது பாயுது பாயுது—தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்—அண்டம்
சாயுது சாயுது சாயுது சாயுது—பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று—தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்திரிகிட தாம்திரிகட''

இந்தக் காலத்தின் கூத்தினைக் கண் முன்பு கண்ட ஞான பாரதியார் மானுடர்க்குப் பயன்படும் தத்துவத்தை யுணர்ந்து, அத் தத்துவம் விஞ்ஞானக் கருத்துக்களில் தோயும்படி துணிவு கொண்டு அத்தகைய நோக்கால் இயற்கையில் சக்தி யிருப்பதை எண்பித்துக் காட்டி, இயற்கையை இயற்கையாகவே பாவித்து திறந்த உள்ளத்துடன் பரவலாயினார். எனவே, பாரதி யாருக்கு உலகமே பயின்றாழ்ந்து தெளிதற்குரிய இயற்கை ஞான புத்தகமாயிற்று.

பாரதியார், சடப்பொருளையும் சட உலகினையும் நிலை பெறச் செய்வது கவர்ச்சியெனும் சக்தி யெனக் கொண்டு அதனைப் பரம்பொருள், கண்ணன், காளி, முத்துமாரி, வடிவேலன் எனப் பெயரிட்டு அழைத்தார். இயல்பாகவே பயபக்தியொடு இடை விடாது இவற்றின்பால் அன்பு உண்டாயவழி பாரதியார் மெய் மறந்தவராய் உரைக்கக்கூடிய தன்றாகிய பேரின்பத்தில் மூழ்குவர். பேரின்பத்தில் ஆழ்கும் செய்கையால் பரம்பொருள் மீதுள்ள நம்பிக்கை மேல் உருவான ஞானக்கருத்து வலுக்கவும், அப்பரம் பொருளோடு நெருங்கிப் பழகும் வாய்ப்போடு தூய விருப்பம் அரும்ப, அதனை ஆண்டான் எனவும் தான் அடிமை யெனவும் உணர்வாராயினார். இவ்வுறவு முற்றவும் இறைவனோடு தன்னை சமமாகப் பாவித்து இறைவனை தந்தை, தாய், அரசன், சற்குரு, சேவகன், காதலன் என்ற எல்லாவகையாலும் அன்பு முறையில் கற்பித்து, தனக்கே உரிமையாகுமாறு, தன்னையே இறைபால் ஒப்படைக்கும் பூரண ஞானியாக விளங்குகிறார்.

இறைவனை ஆண்டானாகவும் தம்மை அடிமையாகவு எண்ணி வழிபட்ட அப்பர், இறைவனை தந்தையாகவும் தம்மைக் குழந்தையாகவும் நினைந்து வழிபட்ட ஞானசம்பந்தர், இறை

வனைத் தமக்குத் தோழனாகக் கருதி வழிபட்ட சுந்தரர், இறைவனை ஆன்மாவுக்கு உயிராய் நிறுவி வழிபட்ட வாதவூரர் ஆகியோர், இறைவன்பால் ஒவ்வோர் உறவை ஏற்படுத்திக் கொண்டு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினில் ஒன்றை மட்டும் பின்பற்றி உயர்ந்த ஞானம் பெற்று பரமானந்தப் பேறும் முத்தியும் பெற்றனர். ஆனால் பாரதியாரோ இறைவன்பால் எல்லா வுறவுகளையும் ஏற்றுக் கொண்டு காதலன்பைப் பெரிதும் வளர்க்கும் முறையினைப் பாங்குறக் கொண்டுள்ளாரென்பது அவரது தத்துவ ஞான விளக்கத்திற்குச் சிறந்த 'கண்ணன் பாட்டு' வெள்ளிடை விளங்கலாம். அன்பு பூரணமாகும்போது உண்மை ஞானம் தோன்றி, அதனுடனே இணங்கிக் கொள்ளும். இத்தகைய ஞானத்தையும் பக்தியையும் அனுபூதி நிலையில் பாரதியார் ஒன்றாகப் பெற்றார். உயர்வற உயர்ந்த பரம்பொருளின் இயல்பை ஞானபக்தி எல்லையின்கண் உணர்ந்து திகழ்ந்தார். ஆன்மீகத்துறை அறிவாலும் மெய்ஞ்ஞானத்து மெய்யன்பாலும், உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறிதொன்றில்லை எனக் கொண்டு, இறைவனை மனவொருமையா லெய்திட பேரின்பக் காதலே இன்றியமையாதென்பதைப் பாரதி ஞானியார்,

''ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்''

என உண்மை ஒளிமிளிர அறிவுறுத்துவாராயினார்.

மற்றும் பாரதியார், நாட்டினிலே பொறியற்ற விலங்குகள் போல் வாழும் மக்களை ஆன்மீக மலர்ச்சியுடன் பயனுற வாழச் செய்யவும், வையப்பற்றை வளர்க்கும் நாட்டுப் பற்று சிறக்கவும் பரம்பொருளின் அருளினை வேண்டி, தனது ஆன்ம விடுதலையினைக் குறிக்கோளாகக் கொள்ளாது, மக்கள்பால் சுதேச பக்தி உணர்வினை செலுத்தும் விருப்பமதில் சுவைத்தலையே மேற்கொண்டார். பிறர்க்குரியராக, தனக்கென வாழாத பெருந்தகையாரது ஞானவுள்ளம், உலகின்கண்ணுள்ளார் யாவரும் சமத்துவம் மெய்ப்பொருளின் வடிவமென்றும் தோன்றல்கள் என்றும் ஒருமைப்பாட்டுணர்வாய் 'ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை'யாக சமைக்க முனைந்தது. அம்முனைப்பில் தனக்கு சாகா வரமும் வையத் தலைமையும் அருள்புரிவதில் தடையுமுளதோ என சிவசக்திபால் முறையிட்டார், ஞானக் கவிஞராகிய பாரதியார்.

''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல்''

எனப் பாரதி புகன்றது ஈண்டு உளங்கொளற்பாற்று.

பாரதியார் அன்னை சக்தி வழிபாட்டைப் பேணும் சாக்தர். இவர் மனத்திலே பொருந்தி நின்று என்றும் நிலைத்திருப்பது

மனோன்மணியென் மா சக்தி வையத்தேவி! இவர் இறைமை யின் இயக்கம், சக்தி யெனக் கொண்டு, ஆதிப்பரம் பொருளின் நாட்டியத்தில் அடங்கும் ஆட்டம் சக்தி யென்பதை நயமுற வுணர்ந்து, சத்தியும் சிவமும் ஒன்றெனத் துணிபு கொண்டார்.

''இறைவி இறைவன் இரண்டும் ஒன்றாகித்
தாயாய்த் தந்தையாய், சக்தியும் சிவனுமாய்
உள்ளொளியாகி உலகெலாம் திகழும்
பரம்பொருள்''

மற்றும், சக்தியை, சாதனைகளைப் பெருக்கும் 'விளைச்சி' எனப் புகன்று,

''வாழ்வு பெருக்கும் மதியே சக்தி
மாநிலம் காக்கும் மதியே சக்தி
தாழ்வு தடுக்கும் சதிரே சக்தி
சஞ்சலம் நீக்கும் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை அளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத்து ஒளிரும் விளக்கே சக்தி''

என இறைமைச் சக்தியை வியந்து போற்றுகின்றார். ஐம்பூதத்தா லாய உடலை இன்பமயமாகக் கொண்டு அதனுள்ளிருக்கும் இறை மயமாயுள்ள சக்தி மூலம் இன்ப நிறைவை எய்திட விரும்பி,

''இன்பமே வேண்டி நிற்போம்
யாவும் அவள் தருவாள்'' எனவும்,
''... ... ... இன்பங்கள் எல்லாம்
யாதும் சக்தி இயல்பெனக் கண்டோம்
இனைய துய்ப்பம் இதயம் மகிழ்ந்தே''

என இயம்புவாராயினர்.

பாரதியார், 'சக்தி, நல்ல வல்லெழுந்து சேர்ந்த மொழி' யெனக் கருதி, 'ஓம்' எனும் மந்திரச் சொல்லின் பொருளைப் பற்றிய சிந்தனை மிக்கதோர் பயனைப் பெற, அம்மந்திரச் சொல் லோடு 'சக்தி'யினை இணைத்து 'ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்' என ஆண்மையொடு வீராவேசமுற உச்சரித்துப் பாடும் ஒலியால் அஞ் ஞானம் விரைந்தோட, சக்தியோடு உள்ளன்பால் உறவாடலாயி னார். வேதம், கீதை, உபநிடதம் முதலாய ஞானக்கலை இவர் ஆவியில் பாய்ந்து கலந்து, பாரத நாட்டின் பண்பாட்டுடன் வளர்ந்து, தம் மனத்தில் தெளிந்து நின்ற அகண்ட ஞானக் கருத் துக்க ளெல்லாம் அவரது அற்புத மெய்ஞ்ஞானப் பாடல்களில் திகழ லாயிற்று. மற்றும் பாரதி ஞானத்தமிழின் வனப்புக்குச் சிறப்புப் பாயிரம் பாக்களிடையே, வேதம், கீதை, உபநிட்தம் முதலிய வற்றோடு,

"செங்கதிர்த் தேவன் சிறந்த வொளியினைத்
தேர்கின்றோம்—அவன்
எங்களறி வினைத் தூண்டி நடத்துக"

எனும் காயத்திரி மந்திரப் பொழிப்பையும் மொழிபெயர்த்து அக மகிழும் ஞானியாய் விளங்குதல் பெரிதறிந்து மகிழற்பாற்று. 'பாட்டினிலே சொல்லுவதும் அவள் சொல்லாகும்' என்பது பாரதியின் ஆத்மானுபூதியில் பூத்தெழும் புனித வாக்கு. எனவே, இவரது ஞான உள்ளத்தில் உரைவிளக்கமாகத் திகழும் பக்திக் கவிதை, ஞான நாதத்தை நுட்பச் சுருதி கூட்டி எழுப்பி, வையத்தை பாலித்திடும் பாரதவாணியின் மாசில் வீணையின் இசையாகும். மற்றும் சக்தியை, 'கையில் நலந்திகழ் யாழுடையாள்' என பாரதி பாராட்டுவதால், வாழ்விற்கு கலங்கரை விளக்கமாக இலங்கும் இவரது ஆத்ம ஞானக் கவிதை. பாரதவாணியின், அருமையாய நாதம் கொண்டுள்ள யாழிசையுமாகும். மனம் விரும்பும் இத்தகைய இசை சீவன் முக்தியினை நாடச் செய்யும் பொலிவினையுடையது. இதனால் பாரத ஞானத்தின் இயல் அழகிலும் இசையமைப்பிலும் சிறந்து வாழ்ந்த, பாரதியின் கவிதைக்கு இணை, அஃதே.

ஞானக்கவிச் சிற்பியாகிய பாரதியாரது ஞானத்தோடு கூடிய இசைப்பாடல்கள் உயிர்களின் உயிரையும் உள்ளத்தையும் ஊடுருவி ஆத்மாவிலும் அந்தகரணத்திலும் கலந்து இறையுணர்வைத் தூண்டும் பான்மையுடையது. பாரதியாரின் இசைப்பாக்களின் ஒலியால் தமிழ் மந்திர வலி பெற்று செயபேரிகை கொட்டும் அவர் பாடிய மெட்டுகளும் யோகசித்தி பாட்டுகளும் இதயத் தந்திகளின் வழி இன்பப் பண் முழக்கங்களாக விளங்கி, வீரசக்தியை நடமாடச் செய்யும். இவரது பாக்களின் இசைவழி, ஐம்மலங்களும் அறும்; துன்பத் துயர் அகலும்; உள்ளம் உருகும்; இறை அன்பைப் பெருக்கிக் கலக்கும் இசையால் என்பு உருக, உயிரும் உருகும்; உயிர் உருகுங்கால் உயிரில் உள்ள இறையும் உயிருடன் ஒன்று படுதல் ஒருதலை. பாரதியார் தன் இசைஞானக் கலையினால் இறைவனைத் திறம்பட விளக்கி, இயற்கையின் உண்மையினை பிரதிபலிக்கச் செய்யும்வகையில், பாட்டிசையினை, ஆத்மச் சுவை மிக நல்கும் நாத விருந்தாக ஆக்கியுள்ளார் இதனால் அவர் இசைக்கலைவழி ஆத்மாவுடன் வாழ்வை அமைத்து இணைப்பதில் வல்ல ஞானியாகத் திகழ்ந்தார்.

மென்மையும் நுண்மையும் வாய்ந்துள்ள தமிழிசை ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்கள் வரை எல்லா உயிர்களையும் வசப் படுத்தும் பான்மையுடைய தென்பது இசைஞானி பாரதியாரின் கருத்து.

''காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்''

என்றுரைப்பார், பாரதியார். இயற்கையிலே குழந்தைகளுக்கு இசையுணர்வு இருப்பதால், அதனை ஏற்றமுறையில் விளங்கி மனப் பயிற்சிக்குப் பயன்படுத்துவான் வேண்டி பாரதி குழந்தை கட்கு.

''காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு''

வகைகளில் பழக்கப்படுமாறு வற்புறுத்துவாராயினார். இவர் கையாண்டுள்ள இசைமுறை, இறைக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு தோன்ற, எழுத்தொலியினை அடிப்படையாகக் கொண்டு, பண்ணுக்கு காரணமாயுள்ள ஓசையாகிய இசை மன்னுயிர்களது உள்ளத்தை தன் வயப்படுத்தும் கழிபேராற்றலை யுடையது. இதனான் இசையில் இறையை ஈடுபடுத்தி, நம்பால் இறைவனை வயப்படுத்திக் கொள்வது எளிதாகிறது. செய்யுள் உறுப்புகளாகிய சீரும் தளையும் இசைக்கலைக்கு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள தென்பதை பாரதியின் இசைப் பாக்கள் அவரது கவித்திறனையும் அருட்திறலையும் நயம்படக் காட்டும். சீரெனப்படும் இனிய ஒலி, ஓசை வகையால் தளையாக வயங்கி, தாளப் பொருத்தத்தோடும், இவரது பாக்களில், ஞானத்து விழுமிய பொருளுணர்ச்சியினை எழுப்பும் சிறப்பு வாய்ந்துள்ளது நோக்கப்படும்.

பாரதியார் இசையுருவில் தமிழை நிலைய வைத்து, தமது சக்தி வாக்கை தாளத்தோடு கூட்டிப் பொருந்தும்படி அமைத்து சுய மெட்டுகளுடன் சுதந்திரமாகப் பாடி இறையருளை நாடிய வித்தக ஞானியாய் வயங்கினார். இவரது இசையொலிகள் மந்திரம் போல் இவருடைய பாக்களில் பயுன்சுரக்கும் முறையில் சொல்லின்பம் வாய்ந்து ஞான இன்பப் பண்ணிசையோடு நாட்டில் நிலவின. வண்டுகளின் இசை வகையால் மலர் மொட்டுகள் நெகிழ்ந்தன என்பது 'முல்லைப்புதலும் வரிவண்டூதி வாய் நெகிழ்ந்தனவே' என குறுந்தொகையின்கண் நுவலப்படுகின்றது காண்க. அது போன்று, பாரதியாரின் பாட்டிசை கேட்டு இன்புறும் மக்களது நெஞ்சத்து மொட்டு, நாட்டுப் பற்றும் ஞானப் பற்றும் கொண்டு மகிழும் வண்ணம் நெகிழலாயிற்று. எனவே, ஞான இன்பம் நல்கும் இவரது இசைப்பாக்களை உணர்ச்சியுடன் இசைவகையான் முறைப்படி வழுவாது பயில்வார் இசைப் பயனாய் இலங்கும் இறைவனை எளிதே எய்தப் பெறுவாரென்பது துணிபு மற்றும் இவரது கலைப் பண்புள்ள பாக்களின்கண் படிந்து நிறைந்துள்ள ஞான எண்ணங்களை, உலகினை வயப்படுத்துமாறு மீட்டினால், அவை,

பகையைப் போக்கி, அமைதியும் ஆறுதலும் கொண்டுள்ள சக்தி நல் அலைகளாக எங்கணும் பரவி, ஒலிநலமும் நயமும் இழைந்தும் இயைந்தும் செவிக்கு நல்லின்பம் ஊட்டும் செவ்வியினை யுடைய தாய் வயங்குவது கண்கூடு. இதனைக் கருத்தில் கொண்டால் ஞானமுறுவல் எழுதல் இயல்பு. எனவே இயற்றமிழிசையினை வளர்த்ததோடமையாது, இசையோடு பாடத்தகும் பாவினப் பாக்களைக் கொண்டே, இசையமுதம் உயிருக்கும் உளத்திற்கும் பயன் படுமாறு, கனி தமிழிசையை ஞானம் பரப்பும் மேன்மையுடையதாக வளர்த்து, இசை இறை பக்தியினை யுண்டாக்கி ஆன்ம ஈடேற்றத்தைக் கைகூடச் செய்யும் ஆற்றலுடைய தென்பதையும், இசை ஞானியராகிய பாரதியார் உணர்த்தியுள்ளார்.

சீவன் முக்திகளில் வீறிய பாரதி, இருள் ஒன்றெனவும், மனத் திருளுடையார் பலரென்றும், அவ்விருளை நீக்கும் தலைவன் ஒருவனென்றாகிய முப்பொருளுண்மையை தத்துவ இலக்கணங்களோடு தம் பாக்களில் பலபடத் தெளியக் கூறியுள்ளார். மற்றும் இறையுண்மை இயல்பு, இறையின்பத்தின் நிலை ஆகியவற்றை தத்துவ ஞானம் அத்யாத்ம ஞானச்செல்வம் முதலியவற்றைக் கொண்டு, மக்கள் உணர்ந்தவழி உயர்பயன் எய்துமாறு உதவி புரிவர். இதனான் மக்கள் சிற்றறிவு முழுதும் நீங்கப் பெற்று, பேரறிவாகிய ஞானம் விரிந்து தோன்றும் மனதைப் பெறுவரென்பது திண்ணம். பாரதியாரது ஞான விழிப்பு, ஞாலத்தே அகவிழிப்பினையும் நல்லுணர்வையும் நாட்டுப் பற்றினையும் மலரச் செய்து சிறந்த மங்கலத் தகுதியினை எய்துவதாயிற்று. எனவே பாரதியாரது ஞான உணர்வும் முதிர்வும், உரைவரம்பிற்கும் அறிவின் எல்லைக்கும் அப்பாற்பட்ட தாகுமென்பதை நினைவுகூர்தல் பொருந்தும். பாரதியாரின் கவிதை, ஒளி, தெளிவு கொண்டு, கடவுளைக் காட்டும் ஞானக் கலையின் சிகரமாக காட்சியளிப்பதினான், அவர் வாழ்ந்த காலத்தை, மக்களுள்ளத்தை செம்மைப்படுத்தும் சிற்பிச் செம்மல் திரு. வி. க. அவர்கள் 'பாரதி சகாப்தம்' எனத் தேர்ந்து இன்பக் கனிவு தோன்ற அமைப்பர்.

—[முற்றிற்று]—

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கஞ் செழிக்கச் செய்வீர்!

—பாரதியார்

நாகர் — ஊரும் — பட்டினமும்

பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்.,

சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் வரும் ''நாகநீள் நகரொடு நாகநாடதனொடு போகம் நீள் புகழ் மன்னும் புகார் நகர்'' என்ற தொடர்களுக்குப் பொருந்தும் மாற்றுச் சிந்தனையாக இவ்வுரைத் தொடர் அமைந்து நாகர் என்பவர் குறித்த விளக்க மாக அமைகிறது.

மங்கல வாழ்த்துப் பாடலில் புகார்ச் சிறப்பு கூறுமிடத்து அடிகள், சோழகுலப் பரம்பரையினருடன் ஓங்கிப் பரந்தொழுக லான் பூம்புகாரைப் போற்றுகிறார்.[1] அடுத்து பொதிகைக்கும் இமயத்திற்கும் எவ்வாறு குறைகண்டு கூறாரோ அதுபோல் பதி யெழுவறியாப் பழங்குடி செறிந்து வாழ்ந்திடும் புகார் நகரத்திற்கும் சான்றோர் ஒடுக்கங் கூறார் என்ற பின்,[2]

''அதனான்
நாகநீள் நகரோடு நாகநா டதனொடு
போகம்நீள் புகழ்மன்னும் புகார் நகர்''[3]

என புகார் நகரத்தார் வாழ்ந்த வாழ்வினை நாகநகர், நாகநாடர் ஆகியோர் வாழ்ந்த போக வாழ்வோடு உடன்படுத்திக் கூறிச் செல்வர், அடிகள். ஆயின் அத்தொடர்க்கு அரும்பத வுரை காரரும், அடியார்க்கு நல்லாரும், உ. வே. சாவும்,

1. நாகருலகத்துடனும் தேவருலகத்துடனும் போகம்நீள் புகழ் இவை பொருந்தும் (சிலம்பு-1:21 அரு)[4]
2. சுவர்க்கம் பவணம் இவற்றிற்குள்ள புகழும் போகமும் நிலை பெற்ற அப்புகார் (சிலம்பு-1:21 அடி)[5]
3. பவணம்—நாகலோகம். சுவர்க்கத்திலும் நாகலோகம் போகத்திற் சிறந்தது என்பது சைனநூற் துணிபு. (சிலம்பு 1:21 உ. வே. சா. அ. கு.)[6]

எனப் பொருள் கண்டனர். இவ்வுரைகள் அனைத்தும் நாகர் என்போர் போக வாழ்வில் புகழ் பெற்றனர் என்ற கருத்தினை வலி யுறுத்துவனவாக அமைந்துள்ளன. சீவக சிந்தாமணியின் ''காம நணி நாகரிற் றுய்த்தவாறும்''[7] என்ற தொடர் சான்றாயிலங்கி மேற்கருத்தினை அரண் செய்கின்றது. போக வாழ்வினால் புகழ் பெற்ற இந்நாகர் யாவர்?

'நாகப் பாம்பின் உருவத்தை சின்னமாகக் கொண்ட ஆற்றல் சான்ற ஒரு பழஞ்சாதியர்'—இது சென்னை அருஞ்சொற் பேரகராதி தந்திடும் விடை.[8]

இந்நாகர் வாழ்ந்த ஊர், நாடு. இவை நாகருலகம் என தமிழ் இலக்கியங்களில் வழங்கியுள்ளமை கம்பராமாயண ஊர்தேடு படலத்தின் ஒன்பதாம் பாடலின் 'நாகலயங்களோடு நாகருலகம்' என்னுந் தொடர் போலும் இலக்கிய வழக்குகளால் அறிய முடிகின்றது.

'வழுத்த வரங் கொடுக்கும் இயல்புடைய நாகர்'[10] வாழ்ந்த ஊர்களெல்லாம் நாகர் என்ற பெயரினை முன்கொண்டபடியே எழுந்துள்ளன. இங்ஙனம் அமைந்துள்ள ஊர்களுள் தஞ்சை மாவட்டத்தில் அமைந்த ஊர்களில் நாகப்பட்டினம், நாகூர், நாகத் தீவு, நாகலாபுரம், நாகேசுவரம், நாகங்குடி முதலிய குறிப்பிடத் தக்கன. இவற்றுள் முன்னிரண்டும் கடற்கரை யூர்கள்; பிற உள் நாட்டு ஊர்களாகும்.

சங்க கால, பிற்காலச் சோழநாட்டின் கிழக்கு எல்லை வங்கக் கடலோரம். இக்கடற்கரையில் சோழ நாட்டின் மையப் பகுதியில் அமைந்திருந்தது புகார் நகரம். இத்துறைமுக தலைநகரிலிருந்து தான் சோணாட்டின் வெளிநாட்டு வணிகம் நடந்தேறி, சோழ நாட்டினை செல்வம் கொழிக்கும் சொர்ண பூமியாக வாழ வைத் தமையினைப் பட்டினப்பாலை போலும் சங்க இலக்கியங்கள் பரக்கப் பேசுகின்றன. இவ்விலக்கிய சான்றுகள் வெறும் புகழ்ச்சி யன்று, மெய்மைகளே! தாலமி. பெரிப்ளுசு போலும் வெளி நாட்டார் குறிப்புகளும், கீழையூர், வாணகிரி, மேலையூர், புகார் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் சான்று களும் இம்மெய்மைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.[11]

இப்பெரும் புகழ்பெற்ற புகாரின் தெற்கில், புகாரையொட்டி அமைந்திருந்த இரு துறைமுகப் பட்டினங்களே நாகூரும், நாகப் பட்டினமுமாகும். இன்றைய புகாரும் நாகப்பட்டினமும் சுமார் பதினைந்து கல் தொலைவுக்குள்ளேயே அமைந்துள்ளன.

இந்நாகப்பட்டின; நாகூரின் பெயர் விளக்கங்களாக நாக லிங்கப்பூ நிறைந்த அன்றி நாவல் மரங்கள் செறிந்த ஊர் எனவும் பொருள் காட்டுவாரும் உளர்.[12] மேலும் 'நாக்குத் தமிழ் உரைக்கும் நன்னாகை' போலும் குறிப்புகள்,[13] நாகப்பட்டின ஊராரின் பழகுதமிழ்ச் சொல்லருமையினையும், பழந்தமிழ்ப் பெருமையினையும் குறிப்பதாகவும், நாவன்மை நிறைந்த ஊராகவும் காட்டிடுகின்றன. ஆயினும், நாகர் + பட்டினம் = நாகப்பட்டினம், நாகர் + ஊர் = நாகூர் — நாங்கூர் என 'நாகூர்' எனும் இன மக்கள் வாழ்ந்த இடங்களாக இவ்வூர்ப் பெயர்கட்குப் பொருள் காண்பது பொருத்தமாகிறது.

யவனக் கடலோடியாக கி மு. இரண்டாம் நூற்றாண்டில் தமிழகம் போந்த தாலமி என்பார் சோழநாட்டின் துறைமுகப் பட்டினங்களாகக் குறிக்கும் இடத்து காவிரிப்பூம்பட்டினத்தை 'கபேரியா' எனக் குறிப்பார். அடுத்து நாகப்பட்டினத்தினை 'நெகமோச' எனக் குறித்திடுகின்றார்.[14] தாலமியின் குறிப்புவழி நாகப்பட்டினம் என்ற பெயர், காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர்க்குரிய பழமைக்குச் சற்றுக் குறைந்ததல்ல என்பது பெறப்படுகிறது.

நாகர் என்ற இனத்தார் வாழ்ந்தமையினாற்றான் அவ்விடங்கள் நாகர் என்ற பெயர்த் தொடக்கத்தினைக் கொண்டிலங்கின. நாகர் என்பார் தேவஇனத்தரல்லர். மனித இனத்தின் தொன்மையான ஒரு பிரிவினரே.

''நக்க சாரணர் நாகர்வாழ் மலைப்பக்கம்''[15]

''கீழ்நில மருங்கின் நாக நாடாகும்''[16]

''நாகலாபுரமது நன்னகராள்வோன்''[17]

போலும் மணிமேகலைச் சான்றுகளும்

''நாகருலகத்தினின்றும் கொண்டுவந்த புத்தரின் உடற்கூற்றுப் பிரிவுகளை இலங்கையில் பெரிய விகாரை எனப்பட்ட உருவான வேலி விகாரையில் துட்டகாமி என்ற அரசன் வைத்து வழிபட்டான்''[18]

என்ற குறிப்பும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது.

இக்குறிப்புகளும், வரலாற்றுச் சான்றுகளும் இந்நாகர்களைப் பெரும்பான்மையும் கடலைச் சார்ந்த வாழ்வினைக் கொண்டோராக, கடற்கரை யூரினராயும், தீவினராயும், தீபகற்பத்தினராயும் காட்டுகின்றன.

(மலைச் சாதியினரும், உள்நாட்டாருமாகி விளங்கும் நாகர்களை இவரின் ஒரு பிரிவினராயும். புலம்பெயர் மக்களாயும் கருதலாம்.)

கி. மு. இரண்டாம் நூற்றாண்டுத் தாலமியின் குறிப்பிலும் குறிப்பிடப்பட்ட நாகர் வாழ்ந்த நாகப்பட்டினச் சிறப்பு சிலம்பிலும் மணிமேகலையிலும் கி. பி இரண்டாம் நூற்றாண்டுகளிலும் பேசப்பட்டிருக்கின்றன.

நாகர்களை, நனிநாகரீகம் மிக்க, போக வாழ்வின் இலக்கமாக, உவமையாகச் சிலம்பு காட்டுகின்றது. ஆயின் மேகலையோ நாகர்களைக் காட்டுமிராண்டிகளாகக் காட்டுகின்றது. இம்முரண் குறிப்புகளை ஆழ்ந்து நோக்குமிடத்து,

1. தமிழகத்தின் சோழநாட்டின் நீண்டு பரந்துபட்ட கடற்கரையூரில் வாழ்ந்த நாகர் என்பார் நாகரீகம் என்ற சொல்

லின் தோற்ற முதன்மையராக மிக்கப் பண்பாட்டுச் செல்வர்களாகவும் போக வாழ்வில் புகழாளர்களாயும் வாழ்ந்த சிறப்பும்,

2. தமிழகத்தில் சோழநாட்டின் கிழக்கே, வங்கக் கடற்றீவுகளில் வாழ்ந்த நாகர் என்பார் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தமையையும் புலப்படுகின்றன.

சோழ நாட்டின் நாகர்கள், கடலோரப் பகுதிகளில் வாழ்ந்தமையின் இயல்பாகவே கடலோடுவதில் தேர்ச்சி பெற்று கடல் கடந்த பிறநாடுகளோடு வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டி இருத்தல் வேண்டும்.

'அரசு விழை திருவிற் பரதர்'[19] எனச் சிலம்பு குறிப்பது இவரின் பிரிவினராகலாம் என்பது பின் விளக்கங்கள் வழியுணர முடிகின்றது. செல்வம் மிகப் பெற்றவராதலின் போக வாழ்வின் இலக்கங்களாக இவர்கள் திகழ்ந்ததற்குத் தடையுமுண்டாமோ? பன்னாட்டுப் பண்பாடுகளுக்கும், பல்தேய மக்கட்கும் ஏற்ப அவர் மனங்கன்றாது நகை காட்டி, வணிகம் புரிந்து செல்வமீட்டி கடலைக் கடப்பதில் திறங்காட்டி தம்மூரகத்தே போக வாழ்வின் வகை காட்டி வாழ்ந்திட்ட இவராலன்றோ (நாகர் இகம்) நாகரிகம் என்ற தமிழ்ப் பண்பாட்டுச் சொல் பிறப்புற்றிருத்தல் வேண்டும்.

கடலையும் காற்றையும் வாழ்வின் களங்களாகக் கொண்டிருந்த நாகர், நாகப்பாம்பின் சின்னத்தைக் கொண்டிருந்த ஒன்றே இவரது தொன்மையினையும் செல்வ வாழ்வின் மேன்மையினையும் சுட்டுவதாயுள்ளது. ஏனெனில் மிகப்பழம்பெரும் இனத்தாராகிய சீனரும், எகிப்தியரும், சாவகரும் கொண்டிருந்த அரச சின்னம் நாகப்பாம்பே என்பது வெள்ளிடை.

மிகுந்த செல்வமும், திறமும், நனிநாகரீகமும் போகச்சிறப்பும் நிறைந்த இந்நாகர்தம் வணிகத் தொழிலாலும் கடற்பயணங்களாலும் பிறநாட்டுத் தொடர்பாலும் பிறதேய பிறமத, பிறஇன மக்களொடு இயைந்து வாழும் தன்மை மிக்கோராயும் நாகர்கள் வாழ்ந்துள்ளனர். இதனாற்றான் அடிகள்

''கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்தினி துறையும் இலங்குநீர் வரைப்பும்''[20]

என்றும்,

''பெருநில முழுதாளும் பெருமகன் தலை வைத்த
ஒரு தனிக் குடிகள்''[21]

என்றும் இந்நாகர்களாய கடலோடிகளைச் சிறப்பித்துள்ளார். பிற மக்களொடு இயைந்து வாழ்ந்த இவர்கள் பிற மக்களின் மத, இன வாழ்வுகளையும் மதித்துப் போற்றியிருக்கின்றனர். அதன் காட்சி

எச்சங்களே நாகையிலும் புகாரிலும் அமைந்திருந்த பௌத்த விகாரங்கள் ஆகும்.

புகார் நகரத்தினை அடுத்து அமைந்த சிறப்பாலும், நாகரிக மக்கள் (கடலோடிகள்) நிரம்பப் பெற்றதாக விளங்கியமையாலும் பிறநாட்டுத் தொடர்புடைய வாணிகப் போக்குவரத்தினையும் கொண்ட அடுத்தடுத்ததாக விளங்கியமையாலும் நாகர் ஊராகிய நாகூரும், நாகர் பட்டினமாகிய நாகப்பட்டினமும் புகார் நகரத்தின் சோழ நாட்டின் செல்வச் சிறப்பிற்கும் வலிமைக்கும் விளக்கமாய் நின்றிருக்கின்றன. எனவேதான் பதிவெழுவறியாப் பழங்குடி கெழீஇய புகார்ச்சிறப்புக் கூறுமிடத்து,

''பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கங் கூறார், உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே''

எனப் புகார் நிலத்தான் ஒடுங்கினும் நில நீட்சியானும் வணிக காட்சியானும் புலத்தான் நடுக்கின்றி நிலைஇயதாக சான்றோர் கருதுவர் எனக் காவியர் கூறுகிறார். மேலும் கடலாற்றுக் கோள்களாற் குறைபடினும் அடுத்தமைந்துள்ள நாகரூரொடும், நாகர் பட்டினத்தொடும் கூடியதாகப் ''பெருநிலப்புகார்'' விளங்கி போக வாழ்வில் புகழ் பெற்று, விளங்கிற்று என்ற கருத்துப்படவே அடிகள்,

''அதனான்'' என்ற தனிச்சொல்லிட்ட பின்
''நாகநீள் நகரொடு நாகநாட தனொடு
போகம் நீள் புகழ் மன்னும் புகார்''

எனக் குறிப்பிடுகின்றார்.

அதனொடு மயங்கல், அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி என்ற ஒடு உருபின் இலக்கணத்தொடு[22] இத்தொடர்புகள் அமைந்துள்ளமையானும் அளநாடு, திரைநாடு, காரைநாடு என்பன போன்ற நாடுகள் நாகநாடாகிய நாகப்பட்டினத்தை அடுத்த கடற்கரைப் பகுதிகட்குரிய பட்டினங்கட்குரிய பெயர்களாகத் தொன்று தொட்டு வழங்கி வந்துள்ளமையினைக் கல்வெட்டுச் சான்றுகள் புலப்படுத்துகின்றமையானும், ''புகார் நகர் கடலாற்றுக் கோள்களாற் குறைபடினும் சான்றோர் குறை கூறாது நிறை கூறுவர். அதனால் அடுத்த நாகூரொடும் நாகப் பட்டினத்தொடும் போகம் நீள் புகழ் மன்னிய புகார்'' என இத் தொடர்க்கும் பொருள் காணல் பொருத்தமாகத் தோன்றுகிறது,

—(முற்றிற்று)—

சான்றுக் குறிப்புகள்:

1. சில. 1: 10—12
2. சில. 1: 14—19
3. சில. 1: 20—22
4. சில. 1: 21 அரு. உரை
5. சில. 1. அடி. உரை
6. சில. 1: 21 உ. வே. சா. அடிக்குறிப்பு
7. சிந். 11–ஆம் பாடல்
8. Tamil Lexican Vol. IV Part VII Madras 1930 P. 2198
9. கம்பராமா. ஊர்தேடு: 9
10. நான்மணி: 62
11. பௌத்த விகாரம், படகுத்துறைகள், பழஞ்சுவர்கள், கடலடியில் புதைந்து கிடைக்கும் சுவர்கள், பாண்டங்கள், இவை காவிரிப்பூம்பட்டினத்தில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த அகழ்வாய்வுகள் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன
12. நாட்டுப்புற வழக்கு
13. காளமேகப் புலவர் தனிப்பாடல்
    ''பாக்குத் தெரித்து விளையாடும் பாலர்க்கு
    நாக்குத் தமிழுரைக்கும் நன்னாகை''
14. Tanjore District Gazetteer 1915 P. 243
15. மணி. 16: 15
16. மணி. 8: 54
17. மணி. 24: 169
18. Story of Buddism by A. Aiyyappan & P. R. Srinivasan P. 32
19. சில. 2: 1
20. சில. 5: 11
21. சில. 1: 31
22. தொல். சொல். வேற்றுமையியல் 13 நூற்பா

பழைய நினைவுகளை நினைவிற்குக் கொணரவும், திறனாய்வு செய்யவும், கொள்கைகளை ஊகித்து அறிந்து கொள்ளவும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் மொழி பயன்படுகிறது.

—பேரா. கர்ரே.

பயிலுக நாளும்

புலவர் ஆ. வே. இராமசாமி

பைந்தமிழ் இன்பம் பருக வேண்டின்
பயிலுக நாளும் இலக்கண இலக்கியம்

அ

அருட்பா நெறியே அருள்நெறி யாகும்
அன்புநெறி போற்றின் இன்ப மோங்கும்
ஆக்கவினை செய்யின் ஏக்கம் நீங்கும்
இன்மொழி இயம்பின் துன்பமே இல்லை
ஈகை என்பது இல்லார்க்கு உதவல்
உளமாசு அகற்றின் உலகம் ஏத்தும்
ஊக்கம் இன்றேல் ஆக்கம் இல்லை
எண்ணிச் செய்தால் ஏற்றம் பெறலாம்
ஏர்த்தொழில் ஒன்றே சீர்மிகு தொழிலாம்
ஐயம் அகல ஆய்தல் வேண்டும்
ஒழுக்கம் போற்றின் விழுப்பம் பெறலாம்
ஓதலின் நன்றே ஒழுக்கம் ஓம்பல்
ஔவைவழி வாழ்ந்தால் எவ்வம் நீங்கும்
எஃ(கு)உளம் இருந்தால் எண்ணிய எய்தலாம்

க

கடமை செய்தால் உரிமை கிட்டும்
கவிதை இன்பமே கடலினும் பெரிது
கல்விச் செல்வமே கசடறு செல்வம்
காலம் போற்றினால் ஞாலம் போற்றும்
கிளைஞர் தாங்கினால் நிலைத்து வாழ்வாய்
கீழ்மை யகற்றின் மேன்மை வந்திடும்
குற்றம் நீக்கின் அற்றம் நீங்கும்
கூழின் றேனும் குன்றுவ செய்யேல்
கெடுவினை செய்வோன் கெடுவ துறுதி
கேடு பெருகின் நாடு சிறுகும்
கைதவஞ் செய்யின் செய்தொழில் வீழும்
கைக்கூலி வாங்கும் கயமை வேண்டாம்
கொடுப்பது கெடுப்பின் உடுப்பதும் இழப்பாய்
கோடி கிடைப்பினும் குணத்தில் குன்றேல்
கௌவை சொல்லின் எவ்வம் பெருகும்
கப்போல் வளைந்தால் எப்போதும் சிறப்பு

ச

சமஉடைமை யொன்றே சமாதான வழியாம்
சான்றோ ராக்குதல் ஈன்றோர் கடமை
சிறுமை நீக்கின் பெருமை சேரும்
சீர்மை மிகக்கெடும் சிற்றினஞ் சேர்ந்தால்
சுழிமுனை யறிந்தால் வழிவழி வாழலாம்
சூழ்ச்சி செய்வோர் வீழ்ச்சி யடைவர்
செல்வம் சேர்க்க நல்வழி தன்னில்
செய்ந்நன்றி மறந்தோன் செத்தோனாவான்
சேரிட மறிந்து சேர் தல் வேண்டும்
சையெனத் திரியின் வையந் தூற்றும்
சைவர் என்போர் அவமெலாம் அழித்தோர்
சொல்லுதல் வேண்டும் நல்லவை தாமே
சொல்லிய நெறியில் சோராமை வேண்டும்
சோம்பி யிருத்தல் சாவுக்குச் சமமாம்
சோம்பல் நீக்கின் ஆம்பல செயல்கள்
சௌந்தரம் வேண்டின் புன்னகை போற்று

ஞ

ஞயம்பட வாழின் ஞாலம் போற்றும்
ஞாலம் உய்ய நாளும் பணிசெய்

த

தமிழின் இன்பமே தரணியில் சிறந்தது
தாய்மொழி போற்றல் தக்கோர் கடனே
தாயை மதியான் தறுதலை யாவான்
திண்ணிய உளமே செவ்விய வாழ்வாம்
திண்மை யில்லான் திரிந்து கெடுவான்
திருக்குறள் போற்றுவார் திருவுடை யோராவார்
திருவாசக மோதுவோர் திருவருள் பெறுவர்
தீயவை செய்வோன் தீயினும் கொடியோன்
தீயவை அழியின் தேயம் வாழும்
துன்பத்திற்கு அஞ்சான் இன்பம் பெறுவான்
துப்பு வேண்டின் துப்புரவு வேண்டும்
தூய்மை யில்லான் பேய்போ லாவான்
தெய்வம் போற்றின் தேய்வு நீங்கும்
தெய்வநெறி போற்றலே தெய்வம் போற்றலாம்
தெய்வநெறி யென்பது தீயவை நீக்கலாம்
தேயப் பணியே தூய பணியாம்
தையலர் போற்றின் வையம் வாழும்
தையலர் தாழ்ந்தால் வையம் தாழும்

தொண்டெனப் படுவது தேயத் தொண்டாம்
தொண்ட ரென்போர் தன்னலங் கருதார்
தோல்விக்கு அஞ்சான் வெற்றி பெறுவான்
தௌவை போகின் திருமகள் வருவாள்

ந

நன்மை செய்யும் தொன்மை போற்று
நன்மை செய்யும் புதுமையும் ஏற்க
நாடு போற்றும் நல்லனாய் வாழ்க
நாட்டுப் பணியை நாளும் மறவேல்
நிலையாப் பொருளால் நிலையறம் செய்க
நீர்நிலை போலச் சீர்மிக வாழ்க
நுண்ணிய அறிவால் எண்ணிய பெறலாம்
நூலகம் பொருந்திய ஊரகத் திரு
நூலெனப் படுவது நுட்பம் சான்றதாம்
நெஞ்சத் தூய்மையால் வஞ்சம் வெல்லலாம்
நேர்மை மிக்கோர் சீர்மிகப் பெறுவர்
நைந்தோர்க் குதவல் நல்லோர் செயலே
நொய்ம்மையும் பொய்ம்மையும் நோன்மை கெடுக்கும்
நோன்பு எனப்படுவது நற்செய லாற்றல்

ப

பதுக்கி வைப்போர் பாவிக ளாவார்
பண்பெனப் படுவது அன்பும் ஒழுக்கமும்
பாட்டெனப் படுவது பண்ணும் கருத்தும்
பிறர்நலம் பேணுவோர் பெரியோ ராவார்
பீழை யொழித்துப் பீடுபெற வாழ்க
புளிப்பும் காரமும் பொறுமைக்கு எமனாம்
பூரியோர் நட்பு சீர்மை கெடுக்கும்
பெரியோர் நட்பு பெருமை கொடுக்கும்
பெற்றோர்ப் பேணார் பேய ராவார்
பேதை யென்பான் சொல்லியும் உணரான்
பைந்தமிழ்ப் புலமையே பேரின்ப மாகும்
பொல்லார் தம்மை எல்லோரும் வெறுப்பர்
பொறுமை முன்னே பெருமை பின்னே
போற்றுக என்றும் பொறுமை தன்னை
பௌத்தம் போற்றின் பாரகம் மகிழும்

ம

மன்னிக்குந் தன்மை மாண்போர் செயலாம்
மன்னிய செயல்தான் மாண்பு சேர்க்கும்

மதியார் பின்செலல் மானமில் செயலாம்
மானமிலா வாழ்வும் மனித வாழ்வா
மிடுக்கு வேண்டும் மிடிமைக் காலத்து
மீதி சேர்த்தல் முதுமைக் காகும்
முன்னிய செயலை யெண்ணிச் செய்க
மூத்தோர் சொல்லே காத்தல் செய்யும்
மெய்ப்பொருள் கல்வி கைப்பொருள் போலாம்
மேலோர் நட்பு மேன்மை சேர்க்கும்
மையல் நீங்க மதியைப் பெருக்கு
மொய்ம்பு சேர்த்தல் மெய்தனக்கு ஆக்கம்
மொழிகளுள் மேலது தமிழ்மொழி யாகும்
மோகம் பெருகின் வாழ்வு சிறுகும்
மௌனம் போற்றின் யௌவனம் பெருகும்

ய

யமனுக்கு அஞ்சான் எதற்கு மஞ்சான்
யாதும் நம்மிடம் யாவரும் நம்மவர்
யுவனும் யுவதியும் மனமொன்றல் மணமாம்
யூகம் மிக்கோன் யூகி யாவான்
யோகம் போற்றல் யாகத்தினும் மேலாம்
யௌவனம் காக்க யோகஞ் செய்க

வ

வழங்காச் செல்வன் வாழ்தலின் சாதல்மேல்
வருவாய் பெருக்கி வழங்கி வாழ்க
விடுதலை வீரன் விண்ணையுஞ் சாடுவான்
வீரன் என்போன் தீரம் மிக்கோன்
வெள்ளை யுள்ளத்தில் கள்ளந் தோன்றாது
வேருக்கு நீர்போல் சீருக்கு வாய்மை
வையம் வாழ வைகலும் பணிசெய்
வௌவல் செய்யின் வையந் தூற்றும்
வௌவல் நீக்கின் வையம் வாழும்
இந்நூல் போற்றின் இப்பார் செழிக்கும்

—:(நிறைவு):—

சோறு இல்லாதவனுக்குச் சோறும், உடை இல்லாதவனுக்கு உடையும், வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு நியாயமோ அதுபோல கல்வி இல்லாதவனுக்குக் கல்வி கொடுக்கவேண்டும்.

—தந்தை பெரியார்

தேன்

புலவர் பி. பெ. சுயம்பு

தொல்காப்பியம் கூறுகின்ற சந்திவிதிகளின் துணையோடு 'தேன்' என்னும் சொல்லின் உண்மையான தொல்வடிவத்தை அறிய முயலுவதே இக்கட்டுரை.

தேன் என்னும் சொல்லிற்குத் தொல்காப்பியர் கூறும் சந்தி விதிகளை இருவகைப் படுத்தலாம்:

(க) 1. —ன் + P — > -ன்p—F—ற்p—
[தொ. எ. 341]
தேன்குடம் F தேற்குடம்

2. — ன் + N — > —ன்N—
[தொல். எ. 343]
தேன்ஞெரி

3. ன் — + இறால் > —ன்இறால்
[தொ. எ. 344]
தேனிறால்

(உ) 1. —ன் + P— > — ∅ PP—
[தொ. எ. 341]
[உண்மையில் -ன் கெடவில்லை
-ம் > — P முழுமாற்றம்
(Complete assimilation)]
தேக்குடம் —ம் > —க்
F — ∅ NP— [தொ. எ. 342]
[உண்மையில் — ன் கெடவில்லை.
—ம் > — N̄ பகுதி மாற்றம்
(Partial assimilation)
தேங்குடம் —ம் > — ங்

2. —ன் + N- > - ∅ N-

[தொ. எ. 343]

[உண்மையில் -ம் கெடுகிறது]

தேஞெரி

3. — ன் + இறால் > - ∅ த்த்இறால்

[தொ. எ. 345]

உண்மையில் -த்த்- ஒற்று எழுத்து அல்ல (அ)த்த்(உ) சாரியை ஆகும்.*

P = வல்லெழுத்து

N = மெல்லெழுத்து

N̄ = இன மெல்லெழுத்து

∅ = கெடுதல்

F = உறழ்ச்சி நிலை

முதலாவது வகை விதிகள் னகரவீற்றுச் சொற்களுக்குத் தொல்காப்பியர் கூறிய விதிகளோடு பொதுமைப் படுவன. இவ்விதிகள் ணகரவீற்றுச் சொற்களின் விதிகளோடு பொதுமைப்படுவன. இவ்விதிகள் னகர வீற்றுச் சொற்களின் விதிகளோடு பொருந்துமாறு:

தேன் விதிகள் — பிற னகரவீற்று விதிகள்

1. —இயல்பு

[தொ. எ. 336, 339]

— ன் > & உறழ்ச்சி நிலை

[தொ. எ. 333, 340]

2. இயல்பு (மெல்லெழுத்து முன்)

---

*புள்ளியீற்று முன் உயிர் வரும்போது எழுத்து மிகுதலோ ஈறு திரிதலோ தமிழ் மொழியின் இயல்பன்று. சாரியை மிகுந்து வருதல் உண்டு. இங்கு வரும் சாரியை -த்- என்பதாம். உயிர் (உ) வரும்போது -த்த்- என இரட்டிக்கிறது. தொல்காப்பியம் இதனை -அத்து- சாரியை என்கிறது. மகர வீற்றுடன் -த்- சாரியையும் பிற ஈறுகளுடன் -அத்து- உம் வருகின்றன. சாரியை வெற்றுருபு (emptymorph). எனவே இவை மாற்றுருபுகளாகா. தனித் தனிச் சாரியைகளே.

3. — இயல்பு (உயிர் முன்)

[தொ. எ. 149]

இரண்டாவது வகை விதிகள் மகரவீற்றுச் சொற்களுக்குத் தொல்காப்பியர் கூறிய விதிகளோடு பொதுமைப்படுவன:

தேன்விதிகள் — மகரவீற்று விதிகள்

1) — ம் > * PP- F -ம் > * NP-

[தொ. எ. 311, 333]

2) — ம் > * N-

[தொ. எ. 311]

3) — ம் அத்து

[தொ. எ. 186]

மகரவீற்று விதிகளோடு பொதுமைப்படும் விதிகளின் அடிப் படையில் 'தேம்' என்னும் பிறிதொரு வடிவம் வருவிக்கப்படு கின்றது.

னகரவீறு மகரவீறாக மாறி ஒலிப்பது தமிழ் மொழி வழக்கில் சாதாரணமாக நிகழக் கூடியதே. நுனியண்ண ஒலியான னகரத்தை விட ஈரிதழ் ஒலியான மகரத்தை ஒலிப்பதில் முயற்சி எளிமை உள்ளது. முயற்சிக் கடினமான ஒலி, முயற்சி எளிமை யான ஒலியாக மாற்றம் பெறுவது ஒலியியல் விதிகட்கு உட் பட்ட இயல்பே. னகரவீறு மகரமாக மாறுவதைத் தொல்காப்பிய மும் உடன்படுகின்றது [தொ. எ. 82]. இவ்வடிப்படையில் தேன் என்பதில் உள்ள னகரம் மகரமாகி இருக்கின்றது.

னகரவீறு தெளிவாக ஒலிக்கப்படாமல் தேங் [$t\tilde{e}$] என மூக்கினச்சாயலுடன் ஒலிக்கப்பட்டு நாளடைவில் மகரமாகக் கருதப் படும் நிலையை எய்தி இருக்கலாம். இந்நிலையில்தான் மகர வீற்றின் சந்திவிதிகளும் ஒலிப்பிடையே கலந்திருக்க வேண்டும்.

'தேன்' என்னும் வடிவம் எழுத்து வழக்கிலும் 'தேங்' என்னும் வடிவம் பேச்சு வழக்கிலும் நிலவின என்றும் பேச்சு வழக்குகளை யும் தெரிந்து நூல் செய்த ஆசிரியர் 'தேங்' என்னும் வடிவம் ஏற்ற

---

*இக்குறியீடு வருமிடங்கள் ∅ இக்கு றியீட்டைக்குறிப்பனவாம்

மகரவீற்றுச் சந்தி விதிகளையும் 'தேன்' என்பதற்கு இணைத்துக் கூறவேண்டியதாயிற்று என்றும் தெளியலாம்.

தேன் > தேங் மாற்றம் தொல்காப்பியர் காலத்தில் பேச்சு வழக்கில் தொடங்கி நாளடைவில் பெருவழக்காக நிலைபெற்று மகரவீற்றுச் சொல்லாக எழுத்து வழக்கிலும் இடம்பெறலாயிற்று எனக் கருதலாம். சங்க இலக்கியங்களில் பரவிய வழக்காக வரும் 'தேம்' என்னும் சொல்லின் ஆட்சி இதனை உறுதிப்படுத்துகின்றது.

தேன் (honey), வண்டு, நெய் ஆகிய பொருள்களில் தேன், தேம் ஆகிய இருவடிவங்களும் பொருள் வேறுபாடின்றி வருகின்றன

ஏறத்தாழ தொண்ணூற்றுஇரண்டு இடங்களில் தேம் வருகின்றது—தேன் எண்பத்துஏழு இடங்களில் வருகின்றது.

தேம் = 1) தேன் (Honey):

"... ... ... தேம்பெய்து
அளவுறு தீம்பால்"
[அக. 89: 19, 20.]

"தேம்பிழி தேறல் மாந்தி"
[குறிஞ்சிப்பாட்டு: 155]

2) நெய்:

"தேம் ஊர் ஒண்ணுதல்"
[குறுந். 22: 5]

"தேம் கமழ் ஐம்பால்"
[நற். 100: 4]

"தேம்பாய் கூந்தல்"
[குறுந். 116: 1; ஐங். 324: 5; அக. 257: 8; பதி. 54: 5]

3) வண்டு:

"தேம் பாய்ந்து ஆர்க்கும்"
[அக. 153: 16]

தேன் = 1) தேன் (Honey):

"தேன் சோரும் வரைபோலும்"
[பரி. 16: 46]

"தேன் சோர"
[கலி. 40: 13]

2) நெய்:

"தேன் நாறு கதுப்பினாய்"

[கலி. 40: 9]

3) **வண்டு:**

"...... தேன்

தேன் உண்டு பாட"

[பரி. 16: 17, 18]

"தேன் இமிர் புன்னை"

[கலி. 131: 45]

"கடிமலர்த் தேன் ஊத"

[கலி. 36: 6]

'தேன்', 'தேம்' ஆகிய வடிவங்களுள் 'தேன்' என்பதே தொல்வடிவம் என்பதற்குப் பல திராவிட மொழிகளில் உறவுச் சொற்கள் காணப்படுகின்றன.

DED, 2674b

தென் திராவிட மொழிகள்:

தமிழ் மலையாளம்	tēṉ
கோத்தா	te·n
தோடா	tö·n
கன்னடம்	jēn jēnu tēnu
கொடகு	te·nj

நடுத்திராவிட மொழிகள்:

தெலுங்கு	tēne
கொலாமி நாயக்கி	te·ne
பர்ஜி	tīnney
கதபா (ஒல்)	tīn
(சல்.)	tīnu

வடதிராவிட மொழிகள்:

குருக்.	tīnī
மால்டோ	te ni

முடிபு:

தேன் என்னும் சொல் தொல்காப்பியர் காலத்தில் பேச்சு வழக்கில் 'தேங்' என மாறிச் சந்தி விதிகளில் மகரவீற்று விதிகளைப் பெற்றது, நாளடைவில் தேங் என்பது தேம் என மகர வீறாக நிலைபெற்றுவிட்டது.

துணை நூல்கள்:

1) இளம்பூரணர், தொல்காப்பியம்–எழுத்ததிகாரம், தி. தெ. சை. நூ. ப. கழகம், லிமி., சென்னை, 1972.

2) நச்சினார்க்கினியர், தொல்காப்பியம்–எழுத்ததிகாரம், தி. தெ. சை. நூ. ப. கழகம், லிமி., சென்னை, 1966.

3) Intex des mots de la litterature tamoule ancienne. Vol. II (கௌ–தௌ), Institute Fran-

cais D'indologie, Pondichery, 1968.

4) Burrow T. and Emeneau. M. B., A Dravidian Etymological Dictionary [DED], Clarendon Press, Oxford, 1961.

5) ,, DED [Supplement] Oxford 1968.

6) Vijayavenugopal, G., A modern Evolution of Nannul. Annamalai Univesreity, 1968.

எவ்வளவோ சிறந்த செய்திகள் தமிழைக் காட்டிலும் வேறு மொழிகளில் இருக்கலாம். அதனால், தமிழை மறந்துவிட்டு மற்ற வற்றை ஆராய்வது நன்றாகுமோ? முதலில் தமிழாகிய சூரியனைப் பற்றித் தெரிந்துகொண்டு அப்பால் மற்ற மொழிகளான நட்சத் திரங்களைத் தெரிந்துகொள்வதுதான் முறை.

—பூண்டி அரங்கநாத முதலியார்.

தாய் மொழி வாயிலாகப் பெறும் அறிவு உழுத நிலத்தில் மழை பெய்ததுபோல. பிற மொழி மூலம் பெறும் அறிவு பாறை நிலத்தில் மழை பெய்ததுபோல.... தாய் மொழி மூலம் பெறும் அறிவு ஊற் றுக் கிணற்றிலிருந்து பெறுகின்ற ஆற்று ஒழுக்குபோல ஆகும்.

—குன்றக்குடி அடிகளார்.

என்னருந் தமிழ் நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருந் கலை ஞானத்தால்
பராக்கிர மத்தால் அன்பால்
உன்னத இமமலை போல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

—பாரதிதாசன்

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

—பாரதியார்

வினு விடை

வினு 1 :- வையகம்-கானகம்-வஞ்சகம் முதலான சொற்களில் இடையே 'க' இடம் பெறுவதேன் ?

இரா. சேரலாதன்,
கரந்தை,

விடை :- ககரம் இடையே இடம் பெறவில்லை அஃது சொல்லின் உறுப்பாகவே நிற்கிறது ; வையம் என்பது வையகம் என வந்திருப்பதாகக் கருதி இவ்வினு எழுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

வையம்—வையகம் இரண்டும் வெவ்வேறு சொற்கள்–பொருளால் வேறுபாடுடையவை ஏனையவும் அன்ன ?

பெயரையும் வினையையும் தோற்றுவிக்கும் அடிச்சொல்லாகிய உரிச்சொல்லின் ஈறு வன்கணமாக அமையின் விகுதி இடைச்சொல் பெற்றும் ஏனைய கணங்களாயின் இயல்பாய் நிற்கும். ஈண்டு வினுவைப்பெற்ற சொற்களின் அடிப்பகுதி முறையே வை-கான்-வஞ்ச்(அம்) என்பவை 'அம்' என்னும் விகுதி நிலம், குன்றம், மன்றம் என்றவிடத்துப்போல இடத்தையும், குளம், சலம என்ற இடத்துப்போல நீரையும், ஈரம், உள்ளம், குணம் என்ற இடத்துப் போலத்தன்மையையும் ஓட்டம், கூட்டம் என்ருற்போலத் தொழிற்றன்மையையும் பழம். வளம் என்ருற் போலப் பொருளையும் இடத்திற்கேற்ப உணர்த்தி நிற்கும் அம்முறையில் வை + அம் = வையம் கான் + அம் = கானம் என இடத்தையும் வஞ்ச் + அம் = வஞ்சம் எனப் பண்பையும் உணர்த்திநின்றது வை = புவி-இயற்கை தன் பொருள்களை இருக்கச் செய்யும் இடம் என்பது பொருள் கான் = மணம் (காடு) பல்வேறு மரஞ்செடி கொடிகளின் மணத்தால் நிறைந்தது என்பதுபொருள். வஞ்ச்(ஆம்) வசை என்னும் சொல்லின் உரிச்சொல்லாகிய 'வச்' என்பது வஞ்ச்' என மெலிந்து பழியைச்செய்வது என்னும் பொருளில் நிற்கும். இனி இவை அகம் என்னும் சொல்லொடு கூடி

வை + அகம் = வையகம்—கான் + அகம் = கானகம்
வஞ்ச் + அகம் = வஞ்சகம்

எனநின்று புவியின் நடுவிடம் அல்லது உள்ளிடத்தையும் காட்டின் உள்ளிடத்தையும் வஞ்சனை சூழும் நெஞ்சத்தையும் உணர்த்தி நிற்கும். இவை தாமரை, தண்ணீர் என்பவை போல ஒட்டுப்பட்ட

தொகைச் சொற்களாம் ஆதலின் 'க'கரம் இடையே இடம் பெற வில்லை. அகம் என்னும் சொல்லின் உறுப்பு என்பதைத் தெரியலாம்.

பேராசிரியர். ச. பாலசுந்தரம்.

வினா 2 :— எண்பதை அடுத்துத் தொண்ணூறு என்றும் எண்ணூற்றை அடுத்துத் தொள்ளாயிரமென்றும் வருவது ஏன் ?

விடை :— தொண்ணூறு—தொள்ளாயிரம் என்பவை திரிந்த சொற்கள் அல்ல பிழைப்பட்டு வழுவமைதியாய் வழங்கிவரும் செஞ்சொற்களேயாம் இப்பிழைக்கு மூலம் 'தொன்பது' என்னும் சொல் ஒன்பது எனத்திரிந்த திரிபேயாகும். இத்திரிபு தொல் காப்பியத்திற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நிகழ்ந்திருத்தல் வேண்டும். இவற்றின் பழைய வடிவம் (தொல்)-தொன்+பத்து = தொன்பது. தொல் = நூறு = தொன்னூறு — தொல் + ஆயிரம் தொல்லாயிரம் என்பனவாம் அஃதாவது பத்துக்குமுற்பட்டது நூற்றுக்கு முற்பட்டது ஆயிரத்துக்கு முற்பட்டது என்பது கருத்து. இவை பிழைபடத்திரிந்து ஒன்பது-தொண்ணூறு தொள்ளாயிரம் (தொளாயிரம்) என வழங்கிவிட்டன. பிழையென்பதை ஒன் என் பதும் தொண்-தொள் என்பனவும் பகுதியாக நின்று பிற சொற் களைத் தோற்றுவியாமையால் உணரலாம்.

மற்றுத்தொண்டு என்னும் சொல் ஒன்பதைக்குறித்து வழங்கிய தாகவும் அதனடியாகத் தொண்ணூறு தொள்ளாயிரம் பிறந்தன என்றும் தொல்காப்பியர் இவ்வுண்மையை உணரவில்லை என்றும் ஒருசாரார் கூறுகின்றனர்.

தொண்டு என்னும் சொல் ஒன்பது என்னும் பொருளில் பரி பாடலில்தான் முதன் முதலாகக் காணப்படுகின்றது. இதற்கு அடிப்படை தொல்காப்பியத்தில. தொடைகளின் எண்ணிக்கை கூறும் நூற்பாவில் ''தொண்டுதலையிட்ட'' எனவரும் தொடரும் அதற்கு உரையாளர்கள் ஒன்பது என்னும் பொருள் கூறியதுமே யாகும் இவ் அடிப்படையில் மலைபடுகாடாந்தில் வரும் தொண்டு படுதிவவு (மலைபடு-21) என்னுமிடத்து நச்சினார்க்கினியர் ஒன்பது எனப்பொருள் எழுதிச் சென்றுள்ளார்,

தொண்டு என்பதற்கு வளைவு என்னும் பொருள் தவிரத் தொன்மை என்னும் பொருள் சான்றோர் இலக்கியங்களிற் காணப் பெறவில்லை (தொண்டுதலையிட்ட என்னும் தொல்காப்பியத்தொடர் ஆசிரியர் பாடமன்று என்பதை எனது தொல்காப்பிய உரையுள் கூறுவேன்)

எனவே 90 900 என்பவை நூற்றிற்கும் ஆயிரத்திற்கும் தொன்மையானவை என்னும் கருத்து மாறிப்போய் ஒன்பதுபத்து-ஒன்பதுநூறு என்பவற்றின் புணர்ச்சி எனக் கருதப்பெற்றமையின் அவற்றை நிலைமொழி வருமொழிகளாக வைத்து இலக்கணம் கூறவேண்டிய கடப்பாடு நேரிட்டது. இலக்கணம் கூறுவதற்குரிய நெறிமுறைகள் வரம்புக்கு உட்பட்டவை. ஆண்டுச் சொல்லாய்வை மேற்கொள்ளுதல் கூடாது. எனவே அந்நெறிப்படியே தொல்காப்பியரும் இலக்கண விதி கூறினர். தொல்காப்பியர் அவ்வரம்பு கடவாதவர் என்பதை நாடுரி—பொலன் வேணவா முதலிய சொற்களுக்கு அவர் கூறும் இலக்கண முறையால் அறியலாம்.

பேராசிரியர். ச. பாலசுந்தரம்.

வினு 3 :- புறப்பொருள் வெண்பா மாலையில் வெட்சிப் படலத்தில் விரிச்சி என்னுந் துறைக்குரிய,

"எழுவணி சீறூ ரிருள்மாலை முன்றில்
குழுவினங் கைகூப்பி நிற்பத்—தொழுவிற்
குடக்கணீ கொண்டுவா வென்றாள் குனிவிற்
றடக்கையாய் வென்றி தரும்"

எனும் இவ்வெண்பாவில் குடக்கணீ என்ற பாடம் வந்துள்ளது. குடக்கணா என்ற பாடமும் உள்ளது. எதனைத் தக்கதெனக் கொள்ளலாம் ?

இரா. சேரலாதன்,
கரந்தை.

விடை :- இவ்வெண்பா விரிச்சிகேட்டவருள் ஒருவன் அதனைக் கேளாத ஒருவீரர் தலைவனிடம் கூறுவதாக அமைந்துளது. ஆனிரைகளைப் பாதுகாப்பாகக் கட்டிவைக்குமிடத்திற்குத் தொழு (தொழுவம்) என்று பெயர். ஆனிரைகள் தவறிச் சென்றுவிடாமல் தொழுவத்தைச்சுற்றி எடுக்கவும் கோக்கவும் வாய்ப்பாகக் கழிகளால் அமைக்கப்பட்டிருக்கும் தடுப்புக்கு எழு (எழூ) என்று பெயர்

ஆனிரைத்தொழுவம் நிறைந்த அச்சீறூரில் காவல் தலைவன் மற்ற காவலர்களோடு குழுமித் தொழுவத்திற்குப் புறம்பே உள்ள முற்றத்தில் தான் வழிபடு கடவுளை எண்ணிக் கைகூப்பி நிற்கிருன். அப்பொழுது இவ்விரிச்சியுரை ஒருத்தியால் கூறப்படுகிறது.

விரிச்சியின் நோக்கம் ஆனிரை கவரச்செல்லும் வெட்சிவீரர் கட்கு ஆனிரைகள் கிட்டுமா அவர்கள் வெற்றியொடு வருவார்களா என்பதேயாம். எனவே விரிச்சி ஆனிரையோடு தொடர்புடையதாக அமைதல் வேண்டும். தொழுவின் புறத்தே பலர் குழுமிக் கை கூப்பி நிற்கும்போது ஒருபெண் குடக்கள்ளை நீ கொண்டுவா எனக் கூறுதல் அவள் பெண்மைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்புடையதாகத் தோன்றவில்லை. மேலும் அருகில் உள்ள ஒருவருக்குக் கட்டளை இடுபவள் நீ என விளித்து ஏவுதல் வேண்டுவது மிகையாகும் மற்றும் தொழு (தொழுவம்) என்பதற்கு முதற்பொருள் ஆனிரைக் கொட்டில் என்பதேயாம். ஏணி என்பது ஒப்புமைகருதிவந்த கிளைப் பொருளாகும்.

இருள்மாலைக்காலத்துப் பசுவினது பாலைக்கறக்கும் நோக்கில் மேற்குப் பகுதியில் கட்டப்பட்டிருக்கும் பசுவினைக்கொண்டுவர ஏவுதல் பொருத்தமாக உள்ளது ஆவினை–கொண்டு–வா! என்னும் மூன்று சொற்களும் விரிச்சியாதற்கு ஏற்புடையன. ஆதலின் அவற்றை விரிச்சியாக உவந்து குனிவிற்றடக்கையனிடம் கூறு கிருன் தலைவன்.

எனவே குடக்கள் நீ கொண்டுவா, என்னும் பாடத்தினும் குடக்கண் ஆக்கொண்டுவா என்றபாடம் துறைக்கேற்ப நிற்றலின் இதனையே தக்கதாகக் கொள்ளலாம்.

'கள்' வெற்றிக்களிப்பைக் குறிப்பால் உணர்த்துதலின் உரை யாசிரியர் ''குடக்கணி'' என்ற பாடத்தை மேற்கொண்டார் எனக்கருதலாம்.

வினு 5:— தேன் என்ற சொல்லிருத்து வந்தது தெலுங்கு கரு+நாடு+அகம் ஆகிய சொற்களின் மாற்றம் கருநாடகம் (கன்னடம்) மலையை ஆளுதல் மலையாளம், தமிழ் எச் சொல்லி லிருந்து வந்தது ?

இரா. சேரலாதன்,
கரந்தை.

விடை :— தமிழ்தவிர ஏனைய முடிந்த முடிபாகக் கருதி இவ் வினு எழுப்பப்பட்டுள்ளது !

தெலுங்கு (தெலுகு) தேன் (தேனு) என்னும் சொல்லினடியாக வந்ததென்பது இடைக்காலத் தெலுங்குப் பண்டிதர்களின் கூற்று. கன்னடம் கரு+நாடு+அகம் என்பவற்றின் மரூஉவாக வந்ததென்

பது கால்டுவெல் கூற்று. மலையை ஆளுதல் மலையாளம் என்பது மேற்போக்கான சொல்லாய்வாளர் கூற்று. இவைபற்றி வரலாற் றுராய்ச்சியாளர், மொழியாராய்ச்சியாளர்களிடம் கருத்தொற்றுமை காணப்பெறவில்லை.

இவை விரிவாக விளக்கப் பெறவேண்டியவை. எனினும் என்னுடைய கருத்தை மிகச்சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன் (வேண்டின் பின்னர் விரிவாக எழுதுவேன்).

பொதுவாக ஒருமொழியின் பெயர் அந்நாட்டின் இயற்கை யமைப்பை ஒட்டி அம்மக்களுக்கு ஆகிப் பின் அதுவே மொழிப் பெயராக வழங்கும். இஃது இயற்கை நெறிமுறை. அம்மரபுப்படி

தெலுங்கு :— தெலிங்கானம் என்னும் தொகைச் சொல்லின் மரூஉவாகும் 'தெலி' என்பது ஒருவகைத் தாவர இனமாகக் கருதவேண்டியுளது. அது நிறைந்த காட்டுப்பகுதியில் வாழ்ந்து நாகரிகம்பெற்ற மக்களின் பெயராய்ப் பின் மொழிப்பெயராயிற் றென்பது என் கருத்து.

கன்னடம் :— கல் + நாடு + அகம் = கன்னடம் — கன்னடம் என ஆகியிருக்கலாம். மைசூரும் அதன் சுற்றுப்புறங்களும் ஓசை உடைய பாறைகள் நிறைந்த பகுதியிலிருந்து பின் வளம் பெற் றிருத்தல் வேண்டும்.

மலையாளம் :— பண்டு தமிழகத்தின் ஒருபகுதியாய் இருந்து திரிந்துள்ளது. பழைய தமிழகம் ஏழுபகுதிகளாக இருந்தது (இதனைக் குமரிக்கண்டம் என்று கூறுகின்றனர். அவர் கூறும் குமரிக்கண்டத்தின் வடபகுதியையே நான் பழைய தமிழகம் எனக் கருதுகிறேன்.) அதனுன் ஏழகம் என்பதும் இதற்கு ஒரு பெயர். ஏழகம் பின்னர் ஏழம்—ஈழம் எனத் திரிந்து வழங்கலாயிற்று. (நாட்டைச் சிறுகச்சிறுகக் கடல்கொண்டமையால் நேர்ந்த மாற்றம் இது) இதன் மேற்குப்பகுதி மலையீழம் - கிழக்குப்பகுதி தமியீழம்- தெற்கே யிருந்தவற்றுள் கடல் கொண்டவை போக எஞ்சியது சிங்களஈழம்.

மலையீழம் நாளடைவில் மலையாழமாய்ப் பின் ஆரியர் தொடர் பால் மலையாளம் ஆயிற்று. தமியீழ மன்னவர்கள் மீனவர் செழியர் வளவர் என்ற பெயர்களுக்கு மேலாகப் பாண்டியர் சோழர் என்னும் வடசொல்லைச் சூட்டிக்கொண்ட காலத்தில் குட்டுவர் கோதை என் னும் பெயர்கட்குமேலாகச் சிகரம் என்னும் வடமொழியடிப்படையில் சேரம் சேரர் சேரலர் என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டனர் பின் னர்ச் சிகரம் என்பதைவிட சிறப்பென்று கருதி மலையைக் குறிக்கும்

ஆரியச் சொல்லாகிய கிரி என்பதனடிப்படையில் பிற்காலத்தார் கேரளம் கேரளர் என மாற்றியும் வழங்கிக் கொண்டனர். எனினும் பழையபெயராகிய மலையாளம் அப்படியே மொழிப்பெயராய் தங்கி விட்டது.

தமிழ்:— ஏழகத்தின் தலைநகரமாய் விளங்கிய பகுதியே தமியேழகம் அது தமியீழமாகமாறித் தமிழமாகச்சுருங்கி நாட்டையும், தமிழ் எனச் சுருங்கி மொழியையும் குறிப்பதாயிற்று என்பது என் கருத்து. இவை எல்லாம் கதைபோல இன்றைய அறிஞர்கள் கருதக்கூடும். கதையும் கற்பனைகளுமே காலத்தால் உண்மையாக மலர்வதை வரலாறு காட்டிவருகின்றது. இப்பொழுதைக்கு இது சாலும்.

களப்பிரரின் ஆதி இருப்பிடம்

கி. மு. நான்காம் நூற்றாண்டளவில் கருநாடக மாநிலத்தில் தற்போதுள்ள சிரவணபெளகொள என்று வழங்கப்படும் பகுதி 'கள்பப்புநாடு' என்று அழைக்கப்பட்டுள்ளது. மௌரிய மன்னன் அசோகப் பேரரசனின் பாட்டனாரான சந்திரகுப்தமௌரியர் தம் அரசைத் துறந்து சமண சமயத்தை ஏற்றுத் துறவு பூண்டு அக் களப்பு நாட்டில் உள்ள களபப்பு மலையில் வந்து தங்கினார் என்று சமண சமய நூலான 'வட்டாரதனே' என்னும் நூல் கூறுகிறது. தற்போதுள்ள சந்திரகிரி மலைக்குப் பழைய பெயர் களபப்புபெட்ட என்பதாகும். ஆதலால் சிரணபெளகொள பகுதியே களப்பிரர்களின் ஆதி இருப்பிடமாகும். நாளடைவில் அவர்கள் கோலாரிலுள்ள நந்திமலை தமிழகத்தில் வடபகுதியான வேங்கடமலை ஆகிய பகுதிகளுக்குக் குடியேறி சிறுசிறு பகுதிகளுக்குத் தலைவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவில் வேங்கடமலையை ஆட்சி செய்ததாகப் புல்லி குறிக்கப்படுகிறான். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் கதம்ப அரசனான காகுத்தன் களப்பிரருக்குப் பகைவன் என்று பேலூர் தாலுக்காவைச் சேர்ந்த ஹல்மிடி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு கூறுகிறது. அதே காலத்தில் தமிழகத்தில் சோழ நாட்டில் அச்சுதவிக்ரந்தன் என்னும் களப்பிர மன்னன் ஆண்டு வந்ததாகப் புத்தமத நூல் ஒன்றினால் புலனாகிறது.

—நடன. காசிநாதன்,
களப்பிரர்.

திருமருகல்

டாக்டர் இரா. கலைக்கோவன், எம். பி. பி. எசு., டி. ஓ.,

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த கோச்செங்கட் சோழனல் எழுப்பப்பட்ட எழுபது மாடக் கோயில்களுள் திருமருகல் மாணிக்கவண்ணர் மாடக்கோயிலும் ஒன்றுகும். இத்தலம் நன்னிலத்திலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில், நன்னிலம் நாகப்பட்டினம் பெருவழியில் அமைந்துள்ளது. திருமருகல் என்ற ஊரின் பெயருக்கு ஒரு காரணமுண்டு. மருகல் என்பது ஒருவகை வாழை. கருங்கல் தளத்திலேயே வளர்வதால் இதைக் 'கல்வாழை' என்றும் வழங்குவர். இதன் பழத்தை இறைவனுக்கு வைக்கலாமேயன்றி உண்ணலாகாது. இப்பழத்தை உண்டால் துன்பம் வருமென்ற ஒரு நம்பிக்கை நிலவுகிறது. இந்த வாழை இத்தலத்தின் மரமாதலால் 'திருமருகல்' என்று இத்தலம் பெயர் பெற்றது. இத்தலத்தைச் சம்பந்தர் பெருமான் இரண்டு பதிகங்களில் பாடிப் பரவியுள்ளார். திருமருகலையும், திருச்செங்கட்டாங்குடியையும் இணைத்து ஒரு பதிகமும், தனியே ஒரு பதிகமும் பாடியுள்ளார். தனியே பாடியுள்ள பதிகம் திருமருகலில் சம்பந்தர் பெருமான் நிகழ்த்திய வியத்தகு அருட்செயலை வெளிப்படுத்துகிறது.

பாண்டி நாட்டு வணிகனுகிய தாமன் என்பவனுக்கு ஏழு பெண்கள். அவர்களுள் ஒருத்தியைத் தன் மருமகனுக்குத் திருமணம் செய்விப்பதாக அவன் வாக்களித்திருந்தும், அப்பெண்கள் பருவமுற்ற காலத்தில், தன் வாக்கை நினையாது அவர்களை ஒவ்வொருவராகப் பிறருக்கு மணம் செய்து வைத்தான். இதைக் கண்ட ஏழாம் திருமகள், தன் பெற்றோர் செயலை நினைத்து வருந்தி, அவர்களறியாமல், தன் மாமனுடன் உடன்போக்கு நிகழ்த்தினுள். திருமருகலை அடைந்தபோது இரவாகி விடவே, ஒரு திருமடத்தில் இருவரும் தங்கினர். அன்றிரவு வினை வயத்தால் பாம்பொன்று அவள் மாமனைத் தீண்டியது. அவன் இறந்தான். அப்பெண்ணே செய்வதறியாது திகைத்தாள். திருமருகல் இறைவனை நோக்கி முறையிட்டுப் புலம்பினுள். அவள் புலம்பல் அதுபோழ்து திருமருகல் இறைவனைப் பாடிப் பரவ வந்திருந்த சம்பந்தரின் செவிகளில் விழுந்தது. அவள் துன்பம் நீக்கப் பெருமான் அருள் உள்ளம் கொண்டார். திருப்பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்து அவர்களிருவருக்கும் திருமணமும் செய்து வைத்தார்,

''எரியார்சடை யும்மடி யும்மிருவர்
தெரியாததொர் தீத்திரள் ஆயவனே

மரியார்பிரி யாமரு கற்பெருமான்
அறியாள்இவ ளையயர் வாக்கினையே''

என்ற சம்பந்தரின் அருள்வாக்கு திருமருகலின் பெருமைகளைப் புலப்படுத்தும்.

திருக்குளமும், குளத்தின் நடுவே இறைவனை நோக்கிய நந்தி மண்டபமும் இக்கோயிலுக்கு முன்னால் சிறப்புற அமைந்துள்ளன. அழகிய சிற்பங்கள் இலங்கும் ஐந்துநிலைக் கோபுர வாசல் வழியே உள் நுழைந்ததும் நம்மை எதிர்கொள்வது, கோபுரத்தின் முதல் நிலையுடன் இணைக்கப் பெற்ற செவ்வக வடிவிலான நடைமண்டபம். இதில் விநயகர் வடிவம் முதலாவதாக அமைந்துள்ளது. அதையடுத்துக் கொடிமரமும், பலிபீடமும், இறைவனை நோக்கியபடி நந்தியும் அமைந்துள்ளன. இந்த நடைமேடை முடியுமிடத்தில் நீண்ட செவ்வக வடிவிலான முன் மண்டபம் அமைந்துள்ளது. கல் மண்டபத்திற்குள் நுழைய முன்புறத்தில் நடைமேடைக்கு இருபுறமும் பக்கத்திற்கு ஐந்தாய்ப்படிக்கட்டுகள் அமைந்துள்ளன. இம்மண்டபத்திற்குத் தெற்குப் புறத்திலும், தெற்குக் கோபுர வாயிலுக்கு எதிரில் நான்கு படிக்கட்டுகள் பொருந்திய வாயிலொன்று உள்ளது. அம்மன் திருக்கோயில் முன் மண்டபத்தின் வடக்குப் புறத்தில் அமைந்துள்ளது. இப்பகுதியிலுள்ள முன் மண்டபத்தின் கூரை வண்ணத்தால் அழகு செய்யப்பட்டுள்ளது, சுவர்களில் சம்பந்தர், செட்டி மைந்தனுக்கு நஞ்சு நீக்கிய கதை ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. அம்மனின் கருவறை வாயிலை பெண் வாயிற்காப்போர் காவல் செய்கின்றனர். இறைவி வண்டு வார் குழலியாக இரண்டு தள விமானத்துடன் கூடிய நடராசர் திருமுன்னும், அதனருகில் முருகர் திருமுன்னும் அமைந்துள்ளன. இவ்விரண்டிலும் உள்ள தெய்வ உருவங்கள் அழகிய செப்புத் திருமேனிகளாகும். இம்மகா மண்டபத்தில், உள்மண்டபத்திற்குச் செல்லும் அழகிய வாயில் நடுநாயகமாக அமைந்துள்ளது. இதன் இருபுறமும் எழிலார்ந்த இரு வாயிற்காப்போர் சிங்கத் தலைமீது காலூன்றியவர்களாய்க் காட்சியளிக்கின்றனர்.

இவ்வாயிலுக்கு இடப்புறம் அரைவட்ட வடிவிலான விமானத்துடன் கூடிய சோமாசுகந்தர் திருமுன் அமைந்துள்ளது. அதையடுத்து உள்திருச்சுற்றின் வாயில் உள்ளது. உள்திருச்சுற்றில் தெற்கிலும், மேற்கிலும் நடக்க இடம் விட்டு வெளிச்சுவரையொட்டி தாழ்வாரம் போன்ற அமைப்பு காணப்படுகின்றது. தெற்குப்புறத் தாழ்வாரத்தில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் திருவுருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. வடக்குப்புறத்தில் தாழ்வார அமைப்பில்லாது, மண்ணில் வாழைமரமும், தலமரமான மருகல் வாழையும் உள்ளன. பிள்ளையார், முருகன், திருமகள், சண்டி

கேசுவரர் முதலிய தெய்வங்களுக்கான சுற்றுலைக் கோயில்களும் இத்திருச்சுற்றில் அமைந்துள்ளன.

உள்மண்டபம், கருவறை இவற்றின் வெளிப்புறச்சுவரில் தெற்குப் புறத்திலுள்ள தெய்வப் புரைகளுள் பிள்ளையாரும், தென்திசைக் கடவுளும் காட்சியளிக்கின்றனர். மேற்குப்புறத் தெய்வப்புரையில் அண்ணுமலையார் அருள் செய்கிருர். வடக்குப்புறத் தெய்வப்புரைகளில் நான்முகனும், கொற்றவையும் காணப்படுகின்றனர்.

மகா மண்டபத்திலிருந்து மூன்று படிகளுடன் கூடிய வாயிலைக் கடந்து உள்மண்டபத்திற்குள் நுழைந்ததும், நம்மை எதிர்கொள்வது நடுநாயகமாக உள்ள நந்தியாகும். கருவறை வாயிலை தாண்டியும், முண்டியும் காவல் செய்கின்றனர். மூன்று தள விமானத்துடன் கூடிய கருவறையில் இறைவன் மாணிக்கவண்ணராய் எழுந்தருளியுள்ளார்.

மாடக்கோயிலின் வெளித்திருச்சுற்றில் தெற்குப் புறத்தில் மூன்றுநிலைக் கோபுரவாயில் உள்ளது. இத்தெற்கு வெளிச்சுற்றில் மதிலையொட்டி அமைந்துள்ள மேடையில் பிராம்ஹி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மகேந்திரி, சாமுண்டி என்ற ஏழு கன்னியரின் திருவுருவங்களும் அமைந்துள்ளன. 'ஏழு கன்னியர் வழிபாடு' சோழர் காலத்தின் சிறப்புமிக்க வழிபாடாகும். அம்மன் கோயிலுக்கு மேற்கில் இரண்டு விமானங்களுடன் கூடிய இரண்டு கருவறைகள் ஒரே கோயிலாய் அமைந்துள்ளன. இவற்றுள் ஒன்றில் மருகல் உடையாரும் (மேற்கு நோக்கிய திருமுன்), மற்றென்றில் சௌந்திர நாயகியும் (தெற்கு நோக்கிய திருமுன்) அருள் செய்கின்றனர். இவ்வமைப்பு முறை இக்கோயிலின் தனிச் சிறப்பாகும். அம்மன் கோயிலின் கிழக்குப் புறத்தில் கருவறைச் சுவரை ஒட்டியபடி அமைந்திருக்கும், விமானத்துடன் கூடிய சிறு கோயில் ஒன்றில் யமுனு சண்டேசுவரி காட்சியளிக்கிறார். இது சண்டேசுவரருக்குப் பெண்பால் தெய்வம் போலும்.

சம்மந்தராலும், நாவுக்கரசராலும் பதிகம் பாடப்பெற்ற இம் மாடக் கோயிலின் பிற்கால வரலாற்றைப் புரிந்துகொள்ள இயலாத படி கோயில் திருப்பணி செய்தவர்கள் இங்குள்ள கல்வெட்டுக்களைக் காப்பாற்ருது விட்டுவிட்டார்கள். இக்கோயிலின் கீழ்க் கோபுரத்தில் இருப்பதாகக் கூறப்படும் கல்வெட்டு ஆயிரத்துஅறு நூற்றுப் பதினேழில் தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தில் வழங்கப் பட்ட பொற்கொடையைக் கூறுகிறது. கோச்செங்கட் சோழனல் செங்கல் திருப்பணியாய் எழுப்பப்பட்ட இம்மாடக் கோயிலை சோழ மன்னர்களே கருங்கல் திருப்பணியாய் மாற்றியமைத்திருத்தல்

கூடும். இங்குள்ள ஏழு கன்னியர் உருவச் சிலைகளே அதற்குச் சான்றாகும். இவ்வூருக்கு அருகாமையிலுள்ள திருப்புகலூர், திருச்செங்கட்டாங்குடி முதலிய தலங்களில் உள்ள கோயில்களை முதலாம் இராசராசன் திருப்பணி செய்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. சரியான சான்றுகள் கிடைக்கும் வரையில் இக்கோயிலையும், கற்றளியாக்கி மகிழ்ந்தவன் முதலாம் இராசராசனே என ஊகிப்பதில் தவறு இருக்கமுடியாது. பழமை யான சிற்பங்கள் பல இருக்கும் இக்கோயிலில் கட்டிட அமைப்பு பின்னால் வந்த மன்னர்களாலும் மாற்றியமைக்கப் பட்டிருக்கலாம். தஞ்சை மாவட்டத்தில் நான் கண்ட மாடக்கோயில்களுள் செழிப்புட னும், சிறப்புடனும் விளங்கும் சிலவற்றுள் திருமருகல் மாடக் கோயிலும் ஒன்றாகும்.

மனிதனின் புறத்தோற்றம் அப்படியே இருந்தாலும், காலத் திற்கேற்ப அவனுடைய கருத்துக்கள் மாறியே வருகின்றன. சில காலம் சிறப்புப்பெற்றவை, அடுத்தகாலப்பகுதியில் இருந்ததற்கான அடையாளம் கூட இல்லாமல் மறைந்தே விடுகின்றன. இந்த நிலையில் சமுதாய மேம்பாட்டிற்காகவாவது, இனமும் சாதியும் இல்லையென்ற உள்ளத் தெளிவும், போருக்கும் படைச்செலவுக்கும் இடமளிக்காத ஆட்சிச் சிறப்பும் இளைஞர்களிடையே உண்டாக வேண்டும் என்பதைக் காலமும் கருத்தும் உணர்த்துகிறது.

—முனைவர் மு. வ.

மறப்பண்பில் அறப்பண்பும் இருந்தன்று
மறப்பண்பு மரப்பண்பாய்ப் போனதின்று!
சிறப்பான போர்முறைகள் வகுத்துவைத்துச்
செங்குருதிக் களங்கண்டார் அந்தநாளில்
மறைப்பான இடந்தேடி ஒளிந்துநின்று
மரந்தாவும் குரங்குப்போர் இந்த நாளில்
அறமின்றி நடத்துகின்றார்; வெட்கம்! வெட்கம்!
அழிவுக்கே குடைபிடித்தார் துக்கம்! துக்கம்!

—கவிஞர் உலகநாதன்.

போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்தைஎன துள்ளம் ஏற்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் அஞ்சேன்!

—கவிஞர் கண்ணதாசன்

விழிஞத்தின் வீரக் கற்கள்

கேரளக் கீழ்க் கடற்கரை முனையில் உள்ள விழிஞம் என்ற இடத்தில் கிடைத்துள்ள இரண்டு வீரக்கற்களும் இப்போது பத்ம நாபபுரத்திலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு வீரக்கற்களில் ஒன்று விழிஞத்தின்மேல் படை யெடுத்த பாண்டியர்களை எதிர்த்து மடிந்த வீரனின் நினைவாக வும், மற்றொன்று அதே விழிஞத்தின்மேல் படையெடுத்த சேரர் களை எதிர்த்து மடிந்த வீரன் ஒருவனின் நினைவாகவும் எழுப்பப் பட்டதாகும். இப்பகுதியை முதலில் பாண்டியர்களுக்கு அடங்கி 'ஆய்'குடிச் சிற்றரசர்கள் ஆண்டு வந்தார்கள். பிறகு பாண்டியர் களின் முழு ஆளுகைக்கு இப்பகுதி உட்படுத்தப்பட்டது. இவ்விரு வீரக் கற்களும் கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வட் டெழுத்துக் கல்வெட்டுகளைக் கொண்டுள்ளன.

வீரன் ஒருவன் தன் தலைவனுக்காகத் தன் உயிரைச் செஞ் சோற்றுக் கடனாகக் கொடுக்கிறான் என்ற செய்தியை ஒரு கல் வெட்டு தெரிவிக்கிறது. யார் அந்தத் தலைவன் என்பது தெரிய வில்லை. விழிஞத்தின் வெற்றியானது நெடுஞ்சடை பராந்தக மன்னனின் காலத்திலிருந்தே பாண்டிய அரசர்களின் மிக முக்கிய சாதனையாக அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட் டானது பாண்டியன் பராந்தகனின் காலத்தையாவது அல்லது அவ னுக்குப் பின்வந்த ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லபனின் காலத்தையாவது சார்ந்ததாகக் கொள்ளலாம். இந்த வீரக்கல், குத்துவாளை உறையிலிருந்து உருவிப் பிடித்த நிலையிலுள்ள போர் வீரனின் உருவத்தைத் தாங்கியுள்ளது.

அவ்விடத்திலுள்ள மற்றொரு வீரக் கல்லானது மாறன் சடை யனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. பெருமூரைச் சார்ந்த உள்வீட்டுச் சேவகனான இரணகீர்த்தி என்பவன், சேரர் படையினர் கரைக்கோட்டையைத் தாக்கியபோது எதிர்த்து உயிர் கொடுத்த செய்தியைக் குறிக்கிறது.

தொண்டை மண்டலத்திலே கிடைக்கின்ற வீரக்கற்கள் எல்லாம் எல்லைச் சண்டை, ஆநிரை கவர்தல் போன்றவற்றில் உயிர் கொடுத்த வீரர்களுக்காக எழுப்பப்பட்டனவாகும். ஆனால் விழிஞத்தில் கிடைத்த இந்த இரு வீரக்கற்களும் தங்களுடைய தலைவர்களை முறையான போர்களிலே காத்து மடிந்த மாவீரர் களின் நினைவாக எழுப்பப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர் கே. வி. இராமன்.

தொல்லியல் ஆய்வுகள்

நோக்கம்

நோக்கம் என்பது நோக்கிய நோக்கம், நோக்கல் நோக்கம் என இருவகைப்படும். நோக்கிய நோக்கமாவது கண்ணால் ஒன்றைப் பார்ப்பது. மலையை நோக்கினேன் என்புழி மலை கண்ணாற் காணப்பட்டது என்றார்போலக் காட்சிப்பொருளாய் வருவது. நோக்கல் நோக்கமாவது மனத்தால் ஒன்றை நோக்கு வது. வான் நோக்கி வாழும் உயிர் என்ற வழி வானத்தைக் கண் ணால் நோக்கி என்று பொருள்படாமல் வான் வரவை மனத்தான் எதிர் பார்த்திருந்து என்று பொருள்படுதல் போலக் கருத்துப் பொரு ளாய் வருவது.

ஞாபகம்

ஞாபகம் என்பது நினைவுறுத்தல்; முன்னர்க் கூறாது விட்ட இலக்கணத்தைப் பின்னர் நினைவுறுத்தலாகும்.

'இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே'

என்ற நூற்பாவில் 'ஈற்றினின் றிசைக்கும்' என்றது ஞாபகமாகும்.

அதாவது னகரமாகிய ஈறு ஆண்பால்; ளகரமாகிய ஈறு பெண் பால்; ரஃகான் பகரம் மார் என்ற மூன்று ஈறு பலர் பால்; து று டு என்ற மூன்று ஈறு ஒன்றன்பால்; அ ஆ வ என்ற மூன்று ஈறு பலவின் பால். இப்பதினொன்றையும் கூறவந்த அவ்வச் சூத்திரங்களில், னஃகான் ஒற்று, ளஃகான் ஒற்று, ரஃகான் ஒற்று, மாரைக்கிளவி என்ற நான்கும் ஈறுகள் என்று ஆசிரியர் உணர்த்தவில்லை. அவ் வாறு உணர்த்தாமல் விட்டவற்றை இருதிணை மருங்கின் என்ற நூற்பாவில் 'ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்' என்று நினைவுறுத்தினார். அதனால் இது ஞாபகம் ஆயிற்று.

ஒருவர்

'ஒருவர்' என்னும் பெயர்நிலைக்கிளவி இரு பாற்கும் உரித்தே தெரியுங்காலை' என்பது நூற்பா. இதன் கருத்து:- ஒருவர் என் னும் சொல் உயர்திணை முப்பாலுள் ஆண் அல்லது பெண் என்ற ஒரு பாலை விளக்காமல், ஒருவன் ஒருத்தி என்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும். அஃதாவது ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி பலர்பால் வினையை முடிபாகக் கொள்ளும்.

எ-டு: ஒருவர் வந்தார்.

—தொல். சொல். சேனாவரையம்.

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்**, எம். எல். ஏ.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்**, எம். ஏ.
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்**,
367, மேலவீதி,
தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்**,
கரந்தை,
தஞ்சாவூர்.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்**, எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரனார் மேனிலைப் பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்**, பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்;
பொழிற்றொண்டர்.

Regd No. TN/TJ/17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20-00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	... 250—00	... 250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	... 003—00
ஆயுள் வரி	... 100—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
பரத சாத்திர	1—50
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமு செந்தமிழும்	0 - 25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0- 62
யாழ் நூல் — சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4 - 00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.